விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 141 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 26 செவ்வாய்க்கிழமை (09.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## வடக்குக் கிழக்கு தமிழர் தாயகமெங்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகம்

### யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையை நினைவு கூர்ந்து இன்று 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் வரும் மே 15ம் திகதி வரை வடக்குக் கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியினை வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் இதனைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், 15

### மாவின் விலை அதிகரிக்கப்பட்டாலும்

## பேக்கரிப் பொருட்கள் அதிகரிக்கப்படமாட்டாது

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டாலும், பாண் உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட மாட்டாது என அகில இலங்கை பேக்கரிகள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள பேக்கரிகளில் 75%க்கும் அதிகமான கோதுமை மாவை இலங்கையில் உற்பத்தி செய்யும் இரண்டு நிறுவனங்களிடம் இருந்து 15

## மின்கட்டணங்களை குறைக்க வேண்டும்

### பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தை 20 வீதத்தால் குறைக்க வேண்டும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அந்த ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள் 15

### தமிழ்த் தேசியப் பிரச்சினை தொடர்பாக

# ஜனாதிபதி ரணிலுடன் இன்று பேச்சுவார்த்தை

## தமிழரசுக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

- குறிப்பிட்ட கால எல்லைக்குள் பேச்சுவார்த்தையில் ஈடுபட முடிவு.
- ரெலோ கூட்டத்தைப் புறக்கணிப்பதாக தெரிவிப்பு.

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துடன் குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஆக்க பூர்வமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்குத் தமிழரசுக்கட்சி தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள சந்திப்பு தொடர்பில் நேற்று திங்கட்கிழமை தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் நடைபெற்ற திட்டமிடல் சந்திப்பின்போதே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் இடையிலான சந்திப்பொன்று இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 3.30 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது. 02

## இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான

### முதல் கூட்டம் இன்று

(கொழும்பு)

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான முதலாவது கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

ஜப்பானிய நிதி அமைச்சகத்தை கோடிட்டு ரொய்ட்டர்ஸ் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து, இந்த வார இறுதியில் ஜப்பானால் நடத்தப்படும், 15

## யாழ்ப்பாணத்தில் 85 கிலோ கஞ்சா மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மண்டைதீவு கடற்பரப்பில் நேற்றுக் காலை பெருந்தொகையான போதைப் பொருள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. 15



### தமிழ்த் தேசியக் கட்சிகள் முன்நிபந்தனையுடன்

## வடக்குக் கிழக்கு கூட்டமைப்பாக ஜனாதிபதியுடன் பேச்சில் ஈடுபட வேண்டும்

### ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் அழைப்பாளர் தவத்திரு அகத்தியர் அடிகளார்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கட்சிகள் முன் நிபந்தனையுடன் வடக்குக் கிழக்கு இணைந்த கூட்டமைப்பாகவே ஜனாதிபதி ரணில் 15

### ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸை

## இந்திய 'டாடா' நிறுவனம் கைப்பற்றத் திட்டம்?

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் விமான சேவையை இந்தியாவின் 'டாடா' குழுமத்துக்கு கையளிப்பது தொடர்பில், அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடல்கள் ஆரம்பமாகவுள்ளதாக துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவை 02

### ஜி.எஸ்.பி.பிளஸ்

## வரிச்சலுகை தொடர்பில் இன்று கலந்துரையாடல்

(கொழும்பு)

இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றிய கூட்டு ஆணைக்குழுவின் 25 ஆவது அமர்வில் ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளன.

கொழும்பில் இன்று செவ்வாய்க்கிழமை வெளிவிவகார அமைச்சில் 02

க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான

கொழும்பு றோயல் கல்லூரியின் பரீட்சை வினாத்தாள்

உள்ளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்மைப் பதவி விலகுமாறு ஜனாதிபதி அறிவுறுத்தவில்லை ஜீவன் தியாகராஜா

தம்மைப் பதவியில் இருந்து விலகுமாறு எந்த அறிவுறுத்தல்களும் ஜனாதிபதி தரப்பில் இருந்து தமக்கு விடுக்கப்படவில்லை என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

முன்னதாக வடமாகாண ஆளுநர் உள்ளிட்ட சில மாகாண ஆளுநர்களை குறித்த பதவியில் இருந்து விலகுமாறு ஜனாதிபதி செயலகத்தில் இருந்து அறிவுறுத்தப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில், குறித்த விடயத்தின் உண்மைத்தன்மை தொடர்பில் கருத்து தெரிவித்த போதே வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா குறித்த விடயத்தை தெரிவித்தார். (ம-7,9)

## வரிச்சலுகை...

கூட்டப்படவுள்ள இந்த கூட்டத்திற்கு, இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் ஐரோப்பிய வெளிவிவகார நடவடிக்கையின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் பாவோலா பாம்பலோனி ஆகியோர் தலைமை தாங்கவுள்ளனர்.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள், நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள், வர்த்தகம், மற்றும் உணவுப் பாதுகாப்பு, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு, கல்வி, சுற்றுச்சூழல், பாதுகாப்பு, மீன்பிடி, பொதுப் பாதுகாப்பு ஆகிய அமைச்சுகளின் பிரதிநிதிகளை இலங்கை பிரதிநிதிகள் கொண்டுள்ளனர் நகர்ப்புற மேம்பாடு, வீட்டுவசதி மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகள் இந்த நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.

கூட்டு ஆணைக்குழுவின் கூட்டத்தின் கடந்த அமர்வு 2022 பெப்ரவரியில் பிரஸல்ஸில் நடைபெற்றது. (ம-7,9)

லண்டன் சுற்றுலா விசா
லண்டன் Visit விசா 10 நாட்களில் செய்து தரப்படும்.விருப்பமுடையவர்கள் இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.
மட்டுப்படுத்தப்பட்ட விசாக்கள் மட்டுமே உள்ளது.
(C-6503)
Hybrid international hub (pvt) ltd, Jaffna
076 250 0098, 021 222 1265

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
நிலப்பரப்பு
- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 36 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை
பார்வையிடும் நேரம் :
காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை
தரகர் தேவையில்லை
(15498)
தொடர்புகளுக்கு :- ஜெயம்
077 814 7389, 077 986 5457

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
நிலப்பரப்பு
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்.
பார்வையிடும் நேரம் : காலை 06 மணி தொடக்கம் மாலை 06 மணிவரை
(15498)
தொடர்புகளுக்கு :- ஜெயம்
077 814 7389, 077 986 5457

# மன்னாரில் கத்தி முனையில் ஓய்வு பெற்ற வைத்தியரிடம் பணம், நகை கொள்ளை

(மன்னார்)

மன்னார் -நானாட்டான் பிரதேசத்தில் ஓய்வு பெற்ற வைத்தியர் ஒருவரின் தனியார் கிளினிக்கிற்கு நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் புகுந்த கொள்ளையர்கள் கத்தியை காட்டி மிரட்டி சுமார் 5 இலட்சம் ரூபாவிற்கும் மேற்பட்ட பணம் மற்றும் நகைகளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ள சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

கிளினிக் வளாகத்தினுள் நுழைந்த இரண்டு பேர் சிங்களத்திலும் தமிழிலும் பேசிக் கொண்டு குறித்த வைத்தியரிடம் கத்தியை காட்டி மிரட்டி உள்ளனர்.

இதன் போது சுமார் 5 இலட்சம் ரூபாவிற்கும் மேற்பட்ட பணம் மற்றும் நகை போன்றவற்றை அபகரித்துள்ளதுடன் வீட்டில் இருந்த பெண்களின் நகைகளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளார்கள்.

சம்பவத்தின்போது வைத்தியரின் மூக்குக் கண்ணாடி உடைந்ததில் வைத்தியருக்கு முகத்தில் காயங்கள் ஏற்பட்டுள்ளது. திருட்டுச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட வைத்தியர் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ம-7,9)

# வேட்பு மனு தாக்கல் செய்த அரச ஊழியர்கள் இன்று முதல் பணிக்கு திரும்பலாம் சுற்றறிக்கை வெளியாகியது

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக வேட்புமனுக்களை தாக்கல் செய்த அரச ஊழியர்கள், இன்று முதல் மீண்டும் பணிக்கு திரும்ப முடியும் என இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்றறிக்கை நேற்று வெளியிடப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தாம் தேர்தலில் போட்டியிடும் எல்லைக்கு வெளியே பணி புரியும் அரச ஊழியர்களுக்கு, இதற்கு முன்னரே பணிக்கு சமூகமளிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலில் போட்டியிடும் எல்லைப் பகுதியில் பணியாற்றும் அரச ஊழியர்கள், சுற்றறிக்கை வெளியிடப்பட்டதன் பின்னர், நிறுவனத் தலைவரின் அறிவுரையின் பேரில் அருகிலுள்ள தேர்தல் எல்லைப் பகுதியில் பணி புரிவதற்கான வாய்ப்புள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர தெரிவித்துள்ளார். (ம-7,9)

## ஜனாதிபதி...

இதன்போது ஜனாதிபதியிடம் வலியுறுத்தப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராயும் நோக்கிலான திட்டமிடல் சந்திப்பொன்று நேற்று திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவர் இரா.சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் நடைபெற்றது.

இச் சந்திப்பில் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா, கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறீதரன், இரா.சாணக்கியன், கலையரசன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளின் பிரதிநிதிகள் எவரும் கலந்து கொண்டிருக்கவில்லை.

இப்பேச்சுவார்த்தையின்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் கட்சியின் ஊடகப்பேச்சாளரும்,பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந் திரன் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டிருப்பதாவது தமிழ்த்தேசிய பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் அரசாங்கத்துடன் ஆக்கபூர்வமாகப் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்மானம் மேற்கொள்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

வடக்கும், கிழக்கும் தமிழ் மக்களினதும், தமிழ்பேசும் மக்களினதும் சரித்திரபூர்வமான வாழ்விடங்கள் என்ற அடிப்படை நாட்டுக்குள்ளேயும், சர்வதேச ரீதியாகவும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரே அலகாக உருவாக்கப்பட்டது.எனவே அந்த அடிப்படைக்கு மாறாக எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் ஈடுபடுவதற்கு நாம் தயாரில்லை. எனவே இவற்றின் அடிப்படையிலேயே இன்றைய தினம் நடைபெறவுள்ள ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தையில் பங்கேற்போம் என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும் ரெலோ ஜனாதிபதியுடன் சந்திப்பில் பங்கேற்க போவதில்லை என முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம-7,9,33)

## இந்திய...

கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தியாவின் மிகப் பெரிய வணிகக் குழுமமான டாடா நிறுவனம் ஏர் இந்தியா, விஸ்தாரா, ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் மற்றும் ஏர் ஏசியா ஆகிய விமான நிறுவனங்களை தன்வசம் கொண்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த நிறுவனம் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் மீதும் கவனம் செலுத்தி வருவதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

இலங்கையில் நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களில் ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனமும் ஒன்றாகும். அந் நிறுவனத்தை மறுசீரமைப்பது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கத்திற்கு பாதிப்பு ஏற்படுத்த மத ரீதியாக பின்னப்படும் சதிவலை

## ராஜித சேனாரத்ன

(கொழும்பு)

**ஒருபுறம் சிங்களவர்களையும் தமிழர்களையும் தூண்டி விட்டு இன ரீதியான பிரச்சினைகளையும் மறுபுறம் பௌத்தர்களையும் இந்துக்களையும் தூண்டிவிட்டு மத ரீதியான பிரச்சினைகளையும் ஆரம்பித்துள்ளார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன, மத ரீதியாக மக்களை முட்டி மோதவிட்டு நல்லிணக்கத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான சதி தீவிரமடைந்துள்ளது.

இந்த இரு பிரச்சினைகளும் ஒருமித்து பேசித் தீர்த்தால் தான் இதற்கு சிறந்த முடிவினை எட்டலாம். இல்லையெனில், இவை வடக்கு, கிழக்கை தாண்டி தெற்கிலும் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. என ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். (நி)

# இலங்கை அதிபர் தரம் III ஆட்சேர்ப்பு இம்மாதம் நேர்முகத் தேர்வு ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை அதிபர் தரம் III இற்கான ஆட்சேர்ப்புக்காக, கடந்த 2019.02.10 அன்று நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு, நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு விசேட அறிவித்தல் ஒன்றில் இதனை அறிவித்துள்ளது.

சித்தியடைந்தவர்களிற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் ஜூலை முதலாம் திகதி வரை கல்வி அமைச்சில் நடைபெறும் என அந்த அறிவிப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## 15 கோடி பெறுமதியான தங்கம்

# சூட்சுமமான முறையில் கடத்த முயன்றவர் கைது

(கொழும்பு)

15 கோடி பெறுமதியான சுமார் 7 கிலோகிராம் நிறையுடைய தங்கத்தை சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டு வந்த பயணி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேறும் போது பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். 43 வயதுடைய வர்த்தகரான சந்தேக நபர் கொழும்பு மருதானை பிரதேசத்தை சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 9.20 மணியளவில் எப்.சற்-547 என்ற விமானத்தின் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்திருந்தார்.

குறிப்பாக 8 பொதிகளில் சுமார் 42 தங்க பிஸ்கட் மற்றும் 2 கிலோ 600 கிராம் எடையுள்ள நகைகளை பயணி அவரது உடம்பில் மறைத்து வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார். (நி)

# அதிகாரப் பகிர்வு குறித்து பேசும் நேரம் இதுவல்ல

## என்கிறார் திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

அதிகாரப்பகிர்வு, காணாமலாக்கப்பட்டோர் உள்ளிட்ட பல்வேறு தீர்க்கப்படாத பிரச்சினைகள் வடக்கில் காணப்படுகின்றன என்பதை ஏற்றுக் கொள்கின்றோம்.

எனவே இவை தொடர்பான கலந்துரையாடலுக்கு தமிழ் கட்சிகளுக்கு ஜனாதிபதியால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. ஆனால் நாட்டின் தற்போதைய நிலைமையில் பொருளாதார பிரச்சினைகளுக்கே முன்னுரிமையளிக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

வடக்கு அபிவிருத்தி , அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான கலந்துரையாடலுக்கு தமிழ் கட்சிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டை வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதியினால் விடுக்கப்பட்டுள்ள இந்த அழைப்பினை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் நாட்டில் தற்போதைய பிரதான பிரச்சினை என்ன என்பதை ஜனாதிபதி உணர வேண்டும். எனவே அதிகாரப் பகிர்வு குறித்து பேசுவதற்கு பதிலாக , பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கே முன்னுரிமையளிக்கப்பட வேண்டும்.

இவ்வாறான முக்கியத்துவமுடைய அத்தியாவசிய காரணிகளை புறந்தள்ளி அதிகாரப் பகிர்வு குறித்து பேசுவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமையானது, ஜனாதிபதி பிறிதொரு இலக்கை நோக்கி பயணிக்க முயற்சிப்பதாக தோன்றுகிறது. பொருளாதார நெருக்கடிகளால் மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். எனவே இந்த நிலைமையிலிருந்து நாட்டை மீட்பதற்கு ஜனாதிபதி முன்னுரிமையளிப்பாரானால் அதுவே சிறந்த தீர்மானமாகும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

அதே போன்று தமிழ் கட்சிகளும் இதன் அடிப்படையிலேயே சிந்திக்க வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மறுசீரமைப்பு நடவடிக்கைகள், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினை, அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் உள்ளன என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். எனவே இவை தொடர்பில் பேசுவதை பிழையென நாம் கருதவில்லை.

எவ்வாறிருப்பினும் பொருளாதார ரீதியில் நாட்டை கட்டியெழுப்புவதற்கு முன்னுரிமையளிக்கப்பட வேண்டும் என்பதையே நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம் என அவர் தெரிவித்தார். (நி)

## மகிந்தவை பிரதமராக்க ரணில் இணக்கம்

# வெளியான பரபரப்பு தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலை நடத்த அரசு தயாராகி வருவதாகவும் மொட்டுக் கட்சியின் ஆதரவுடன் பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றால், ராஜபக்ஷவை பிரதமராக்க வேண்டும் என்ற நிபந்தனையுடனேயே மொட்டுக் கட்சி அவருக்கு ஆதரவளிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்காத வாகனங்கள் கறுப்புப் பட்டியலில்

# மோட்டார் போக்குவரத்து ஆணைக்குழு அதிரடி

(கொழும்பு)

5 வருடங்களாக வருமான அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்காத வாகனங்களை கறுப்புப் பட்டியலில் சேர்க்க மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அவ்வாறான வாகனங்களை தகவல் அமைப்பிலிருந்து நீக்குவதற்கும் தீர்மானித்துள்ளதாக மோட்டார்போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் 83 இலட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள போதும் 60 இலட்சம் வாகனங்கள் மட்டுமே QR குறியீட்டு முறைமை மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனவே, 5 வருடங்களுக்கு மேலாக வருமானவரி அனுமதிப்பத்திரம் பெறாத வாகனங்கள், மாவட்ட மோட்டார் வாகன பரிசோதகரின் உதவியுடன் தகவல் அமைப்பில் இருந்து நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## நாடு திரும்பினார் ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரித்தானிய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ளார். நேற்றுக் காலை ஜனாதிபதி கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார் என தெரிவிக்கப்படுகின்றது. மூன்றாம் சார்லஸ் மன்னரின் முடிசூட்டு நிகழ்வில் பங்கேற்பதற்காக பிரித்தானியா விஜயம் செய்திருந்தார்.

இந்த நிகழ்வில் பங்கேற்பதற்காக ஜனாதிபதியுடன் சென்றிருந்த அமைச்சர்கள் குழுவினரும் நாடு திரும்பியுள்ளனர். (நி)


# சிறுவர்களின் போஷாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கு விசேட வேலைத்திட்டம்

(கொழும்பு)

சிறுவர்களின் போஷாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று திட்டமிடப்பட்டுள்ளது என சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் முன்பள்ளிச் சிறுவர்களுக்கு உயர் போஷாக்குடன் கூடிய பிஸ்கட் வகைகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அடுத்த மாதம் முதல் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிவர்பூல் அணி வெற்றி

ப்ரீமியர் லீக் தொடரில் லிவர்பூல் அணி 1-0 என்ற கோல் கணக்கில் ப்ரெண்ட்போர்டு அணியை வீழ்த்தியது.

Anfield மைதானத்தில் ப்ரீமியர் லீக் தொடர் ஆட்டத்தில் லிவர்பூல் மற்றும் ப்ரெண்ட்போர்டு அணிகள் மோதின. ஆட்டத்தின் 13வது நிமிடத்தில் லிவர் பூல் அணியின் நட்சத்திர வீரர் முகமது சாலா அசத்தலாக கோல் அடித்தார்.

அதன் பின்னர் ப்ரெண்ட்போர்டு வீரர்கள் பதில் கோல் அடிக்க தீவிரமாக முயற்சித்தனர். ஆனால்,. லிவர்பூல் அணியின் தடுப்பணையை அவர்களால் உடைக்க முடியவில்லை.

இதனால் லிவர்பூல் அணி இறுதியில் 1-0 என்ற கோல் கணக்கில் ப்ரெண்ட்போர்டு அணியை வீழ்த்தியது. முகமது சாலா ஆட்டநாயகன் விருதைப் பெற்றார். இது லிவர்பூல் அணிக்கு ப்ரீமியர் லீக்கில் 18வது வெற்றி ஆகும்.

எகிப்தைச் சேர்ந்த முகமது சாலா Anfield மைதானத்தில் லிவர்பூல் அணிக்காக 100வது கோல் அடித்தார். இந்த மைல்கல்லை எட்டிய 8 ஆவது வீரர் சாலா ஆவார். (4)



கனிஷ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டியில் பெண்களுக்கான தட்டெறிதலில் பொலிகண்டி இந்துத் தமிழ் கலவன் பாடசாலை மாணவி தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான கனிஷ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் தியகம விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் 18 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் பொலிகண்டி இந்துத் தமிழ் கலவன் பாடசாலையை பிரதிநிதித்துவம் செய்த எஸ். செவ்வானம் 29.46 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.

(படம்-கனகராஜன்)

# கரப்பந்தாட்ட சுற்றுத்தொடர் துன்னாலை அபிஷன் அணி வெற்றி




வடவரணி யாழ் ஒளி விளையாட்டுக்கழகம் மற்றும் யாழ் ஒளி இளைஞர் கழகம் ஆகியன இணைந்து நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டியில் துன்னாலை அபிஷன் அணி வெற்றி பெற்று கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு வட வரணி யாழ் ஒளி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் மாலுசந்தி மைக்கல் அணியை எதிர்த்து துன்னாலை அபிஷன் அணி களமிறங்கியது. இதில் துன்னாலை அபிஷன் அணி 11:03 என்ற அடிப்படையில் மைக்கல் அணியை வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

வடவரணி யாழ் ஒளி விளையாட்டுக்கழகத் தலைவர் வ.நிறோயன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி இறுதிப் போட்டி நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டனர்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக வட வரணி அ.த.க பாடசாலை அதிபர் ந.வசந்தரூபன், வரணி வடக்கு கிராம அலுவலர் க.தனேஸ்வரன், சாவகச்சேரி இளைஞர் சேவை உத்தியோகத்தர் க.றஜீபன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக விளையாட்டுக்கழக காணி உரிமையாளர் சி.அற்புதராசா, விளையாட்டுக் கழகத்தின் மூத்த உறுப்பினர் சி.யோகச்சந்திரன் மற்றும் சமூக சேவகர் க.குணரத்தினம் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர். (4-6-30)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2826

### மதுமிதா

காலையில் தூங்கி எழுந்தால் நம் வேலையை நாமே பார்க்கலாம்...



எழவில்லை என்றால் நம் உறவினர்கள் நமக்கான வேலையைப் பார்ப்பார்கள்... அவ்வளவு தான் வாழ்க்கை.

### யுவன்

முன்னாடிலாம் ரொம்ப வாய் பேசுறேனு சொல்லித் திட்டுனாங்க...



சரின்னு பேசாம போன் யூஸ் பன்னிட்டு இருந்தா என்ன யாரோடையும் பேசவே மாட்டிங்குறனு சொல்லித் திட்டுறாங்க...

### திலானி

கம்பியூட்டர் கீ போர்ட்டைக் கண்டுபிடித்தவரை பார்த்து ஒரு கேள்வி கேட்கிறேன்.. ஏ,பி, சி, டி ய ஏன்டா மாத்தி மாத்தி எழுதி வெச்சிருக்கீங்க...



ரைப்பிங்க் பண்ணும் போது கன்பியூஸ் ஆகுதுல்ல.

### சுபாசினி

கலண்டர் இராசி பலன்ல தோல்வி, பயம், சோகம், அலைச்சல்னு போட்டிருந்தா எல்லாம் கரெட்டா நடக்குது ஆனா...




### நவனீதா

ஏய்யா, மேனேஜர் கடுப்பாய் இருக்காரு?



ஒண்ணுமில்லை, நான் தான் அவருகிட்ட போயி, சார் காலைலதான் ரொம்ப லேட்டா வந்தேன்..இப்ப போகும் போதுனாச்சும் சீக்கிரமா போறேன்னு கேட்டேன். அதுக்கு மொறைக்கிறாரு..,

### கவிநயா

தனக்குப் பிரச்சினை வந்தா கடவுள் சோதிக்கிறாராம். அடுத்தவனுக்குப் பிரச்சினை வந்தா கடவுள் தண்டிக்கிறாராம்.



இதான் சார் நம்ம ஆளுங்க புத்தி.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு மருத்துவர்கள் இலங்கையிலும் பணியாற்றலாம்

## அமைச்சர் ரமேஷ் பத்திரன



(கொழும்பு)

வெளிநாட்டு மருத்துவர்கள் இலங்கையில் பணியாற்றும் வகையில் எதிர்காலத்தில் சட்டம் இயற்றப்படும் என அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

மருத்துவர்கள் வெளிநாடு செல்வதனால் நாட்டின் சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை தொடர்பில் வார இதழ் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

"நாட்டிற்கு நீண்டகாலமாக தேவைப்படும் மருத்துவர்களை உருவாக்க அரசு மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள் தொடங்கப்பட வேண்டும். அதனால் தான் இலங்கை மருத்துவர்கள் பயிற்சிக்காக வெளிநாடு செல்கின்றனர். அந்த நாடுகளின் குடியுரிமை பெற்று அந்த நாடுகளில் வாழலாம். ஆனால் முறையான அனுமதி பெறாமல் எந்தவொரு வெளிநாட்டு மருத்துவருக்கும் இலங்கையில் மருத்துவ சேவை வழங்க முடியாது.

நம் நாட்டில் பணிபுரிய வந்து இந்நாட்டில் குடியேறும் மருத்துவர்களும் தொழில் வல்லுநர்களும் அதிக அளவில் உள்ளனர். உலகச் சூழலை எதிர்கொள்ளும் வகையில் வெளிநாடுகளில் இருந்து மருத்துவர்களை குறிப்பிட்ட நேரத்தில் வரவழைக்க முடியும். ஆனால் அதற்கான குறிப்பிட்ட முறை எதுவும் இல்லை.

இதற்கான குறிப்பிட்ட வழிமுறைகளை அரசாங்கம் தயாரித்த பின்னர், வெளிநாட்டில் இருக்கும் எமது மருத்துவர்கள் போன்று வெளிநாட்டு மருத்துவர்கள் இலங்கையில் குடியேற வரத் தொடங்குவார்கள்.

இந்த நாட்டில் தனியார் மருத்துவக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கும் அதனை ஒழுங்குபடுத்துவதற்கும் தகுதியானவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதற்கு அரசாங்கம் மிகத் தெளிவாகத் தீர்மானித்துள்ளது. எதிர்காலத்தில் இந்த நாட்டில் பல தனியார் மருத்துவக் கல்லூரிகள் வரப் போகின்றன என அவர் தெரிவித்தார். (நி)

# டெலிகொம் நிறுவன பங்குகள் ஜூன் வரை விற்பனை செய்யப்படாது

## உயர்நீதிமன்றுக்கு உறுதி மொழி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் அரசாங்கத்திற்கு சொந்தமான பங்குகள் எதிர்வரும் ஜூன் 15 ஆம் திகதி வரை விற்பனை செய்யப்படமாட்டாது என நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன உயர் நீதிமன்றத்தில் உறுதியளித்துள்ளார்.

டெலிகொம் நிறுவனத்தின் பங்குகளை மாற்றுவதற்கு எதிராக 2 தொலைத் தொடர்பு தொழிற்சங்க ஆர்வலர்களால் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. குறித்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அவர் உயர் நீதிமன்றுக்கு இந்த விடயத்தை அறியப்படுத்தியுள்ளார்.

நிதி அமைச்சின் செயலாளர் சார்பில், முன்னிலையான பிரதி மன்றாடியர் நாயகம், இந்த பங்குகளை மாற்றுவதற்கான செயல் முறை முற்றிலும் சட்ட பூர்வமானது என்றும் மன்றுரைத்துள்ளார். இந்த நிலையில் இரு தரப்பு விவாதங்களை ஆராய்ந்த நீதியரசர் குழாம், குறித்த மனு மீதான விசாரணையை எதிர்வரும் ஜூன் 15 ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளதாக நீதிமன்றத்திற்கான எமது செய்தியாளர் தெரிவித்தார். (நி)



மன்னார் ரோட்டரி கழகத்தின் அனுசரணையில் மன்னார் ஊடகவியலாளர் எஸ். ஜெகனின் இலக்கிய நூல்களின் ஆய்வில் தலைமன்னார் ராமேஸ்வரம் இடையில் கப்பல் போக்குவரத்தை விரைவுபடுத்த கோரியும் பண்டைய காலத்தில் மன்னார் மாவட்டம் எவ்வாறு சிறப்புடன் இருந்தது என்பதை இலக்கிய நூல்கள் மூலம் ஆய்வு செய்தும் உருவாக்கப்பட்ட காணொளி அடங்கிய இறுவெட்டு நேற்று திங்கட்கிழமை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெலிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

(படம் -ஜோசப்நயன்)

# அரசியலமைப்பு பேரவை இன்று கூடுகிறது

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழு உட்பட ஏனைய நான்கு சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும் அடுத்த சில தினங்களில் புதிய உறுப்பினர்களை நியமிக்க அரசியலமைப்பு பேரவை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்காக அரசியலமைப்பு பேரவையின் விசேட கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இன்று நண்பகல் 12 மணிக்கு கூடவுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு உட்பட ஏனைய ஆணைக்குழுக்களின் நியமனங்களை தாமதப்படுத்துவது வீண் செயல் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

எனவே அந்த ஆணைக் குழுக்களை விரைவில் நியமித்து முடிவு எடுக்கப்படும் என தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

**வெளிவாரிப் பரீட்சைகள்**

வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி

- முதலாம் மற்றும் இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2021 (பழைய பாடத்திட்டம் - மீள்பரீட்சார்த்திகளுக்கானது)
- முதலாம் மற்றும் இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2021 (புதிய பாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகளினை 13.05.2023 (சனிக்கிழமை) தொடக்கம் 28.05.2023 (ஞாயிற்றுக் கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளினையும் 09.05.2023 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் 12.05.2023 (வெள்ளிக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணிவரை) பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்.**

(சி-6504)


# இராசிபலன்

**09.05.2023**
**சித்திரை 26, செவ்வாய்க்கிழமை**
**சதுர்த்தி பிற்பகல் - 5.42 மணிவரை**

**மூலம் முன்னிரவு 7.18 மணிவரை**
**சுபநேரம் -10.24-11.54 மணிவரை**
**இராகுகாலம்-2.54-4.24 மணிவரை**

**சந்திராஷ்டமம் - கார்த்திகை ரோகினி**

**வளவன்**

**மேஷம்** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், சேமிப்பை ஈடு கட்டும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** சிரித்துப் பேசும் நண்பர்களால் சில சிக்கல்கள் ஏற்படலாம், உடல்நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்.

**மிதுனம்** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகும், போசன சுகமுண்டு.

**கடகம்** உறவினர் வருகையால் உற்சாகம் அதிகரிக்கும், பகையொன்று நட்பாகலாம், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பிள்ளைகள் நலனில் அக்கறை கூடும்.

**கன்னி** இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், கடன் சுமை குறையும் நாள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு.

**துலாம்** இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் சந்தர்ப்பம் கிடைக்கலாம், வருமானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கூடும் நாள், நண்பர்களின் ஒத்துழைப்புகள், கிடைக்கும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு** சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல்நலனில் கவனம் தேவை, சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சேமிப்பை விலக்குவது நல்லது, போசன சுகமுண்டு.

**மகரம்** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**கும்பம்** எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**மீனம்** மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, செய் தொழில் மேன்மையுண்டு.

**சந்தேகம் ஏற்படும் போது மனதைக் கட்டுப்படுத்திக் கொள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரில் விபத்து
## பெண் ஒருவர் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். நல்லூர் ஆலயத்திற்கு முன்பக்கமாகவுள்ள பருத்தித்துறை வீதியும் செம்மணி வீதியும் இணைகின்ற முத்திரைச் சந்தியில் நேற்றுக் காலையில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

வீதியில் தரித்து நின்றிருந்த கார் திடீரென சடுதியாக திருப்ப முற்பட்ட போது வீதியால் துவிச்சக்கர வண்டியில் வந்து கொண்டிருந்த பெண் மீது மோதியதில் இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த பெண் பலத்த காயமடைந்த நிலையில் அந்த வீதியால் சென்றவர்களும் அப் பகுதியில் உள்ளவர்களுமாக இணைந்து காயமடைந்தவரை மீட்டு வைத்திய சாலைக்கு கொண்டு சென்று அனுமதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6)

# தமிழர்களை தாயகத்திலிருந்து வெளியேற்றவே வடக்கு - கிழக்கில் பௌத்த விகாரைகள்
## சுரேஷ் பிரேமச்சந்திரன் சந்தேகம்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் பல பகுதிகளில் பல்வேறு யுக்திகளைக் கையாண்டு புதிதாகக் கட்டப்படும் புத்த கோயில்கள் தமிழர்களை அவர்களது தாயகப் பிரதேசத்திலிருந்தும் விரட்டியடிப்பதற்கான முயற்சியா என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

அரசாங்கம் வடக்கு-கிழக்கைக் குறிவைத்து அங்குள்ள புராதன சைவ ஆலயங்களை உடைத்து, நீதிமன்ற உத்தரவுகளையும் மீறி, தான்தோன்றித்தனமான முறையில், தனிநபர்களின் காணிகளையும் கபளீகரம் செய்து, அவற்றில் புத்த கோயில்களைக் கட்டுவது மாத்திரமல்லாமல் அதனைச் சுற்றியுள்ள பலநூறு ஏக்கர் காணிகளையும் சுவீகரித்து அதற்கு இராணுவ பாதுகாப்பையும் வழங்கி தொடர்ச்சியாக் சிங்கள குடியேற்றங்களையும் செய்து வருகின்றார்கள்.

இவ்வாறு யுத்தத்திற்குப் பின்னர், ஹம்பாந்தோட்டை போன்ற தூரப் பிரதேசங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட சிங்கள மக்களை வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் குடியேற்றி வருகின்றார்கள். கிழக்கில் ஏற்கனவே முக்கியமான பகுதிகளில் மிகப்பாரியளவிலான சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு புதிய சிங்கள பிரதிநிதித்துவங்களும் உருவாக்கப்பட்டுவிட்டது.

இப்பொழுது வடக்கு மாகாணத்தில் மீண்டும் ஒருமுறை தமிழீழக் கோரிக்கைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாமல் இருக்க வேண்டுமென்றால் வடக்கு மாகாணத்தின் மக்கள் தொகையில் 25வீதம் சிங்கள மக்களாக இருக்க வேண்டும் என அரச இராணுவ உயர் மட்டங்கள் முடிவெடுத்துச் செயற்படுகின்றன.

இதன் வெளிப்பாடாகவே வடக்கு-கிழக்கில் 1000 புத்த விகாரைகளைக் கட்டுவதற்கு 2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் கோடிக்கணக்கான நிதியும் ஒதுக்கப்பட்டது. இதன் மூலம் வடக்கின் குடிசனப் பரம்பலை மாற்றி அவர்களது பாராளுமன்ற, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைத்து வடக்கையும் ஒரு கலவர பூமியாக மாற்றி தமிழ் மக்களை அங்கிருந்தும் விரட்டுவதே மாறிமாறி ஆட்சிக் கட்டிலில் ஏறும் இலங்கை அரசின் நோக்கமாக இருக்கின்றது.

ஏற்கனவே யுத்தத்தின் காரணமாக ஏறத்தாழ 1.5 மில்லியன் மக்கள் அவர்களது தாயகப் பிரதேசத்திலிருந்து விரட்டப்பட்டு விட்டார்கள்.

இப்பொழுது, வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் எதிர்ப்பையும் மீறி, மிகப்பெருமளவிலான வேகமான சிங்கள பௌத்த மயமாக்கல் என்பது ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவம் காப்பாற்றப்பட வேண்டுமாக இருந்தால், அவர்களின் இருப்பு காப்பாற்றப்பட வேண்டுமாக இருந்தால், அவர்களின் மொழி, கலாசாரம், பண்பாடு பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் அரசு தனது சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனைகளைக் கைவிட்டு சகல இனங்களும் இந்த மண்ணில் தமது சொந்தப் பிரதேசங்களில் அச்சமின்றி பாதுகாப்புடன் வாழும் சூழ்நிலையை ஏற்படுத்த சர்வதேச சமூகம் குரல் கொடுக்க வேண்டும். குறிப்பாக இந்தியா இந்த விடயங்களில் தனது தீவிர கவனத்தைச் செலுத்த வேண்டும் என தெரிவித்தார். (4-6)

## ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிவான் நீதி மன்றில் எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 9 மணிக்கு வாக னங்கள் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளது என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

## குருபூசை தினமும் சமயப் போட்டியும்

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு மீசாலை பன்றிக்கேணி கந்தசுவாமி கோயிலில் திருநாவுக்கரசர் குருபூஜை தினமும் பேச்சு, பண்ணிசை போட்டியும் எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப் போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 12 ஆம் திகதி என்பதுடன் போட்டியில் பங்கு பற்ற விரும்புவோர் 077 849 6538 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (4-6)

## டயர் வெடித்ததில் ஒருவர் காயம்

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் நேற்று டயர் கடை ஒன்றில் டிப்பர் வாகனம் ஒன்றின் டயரிற்கு காற்று மீள் நிரப்பிக் கொண்டிருந்த பொழுது திடீரென டயர் வெடித்ததில் அருகில் நின்ற ஒருவர் காயமடைந்தார்.

உடனடியாக அப் பகுதியில் நின்றவர்கள் அவரை மீட்டு தருமபுரம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றனர். (4-6-316)

# வெடுக்குநாறிமலை ஆலய இறுதி நாள் பூஜைகள் நாளை

(யாழ்ப்பாணம்)

வெடுக்குநாரி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய இறுதி நாள் பூஜை வழிபாடுகள் நாளை புதன் கிழமை இடம் பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் கடந்த பங்குனி மாதம் இறுதிப்பகுதியில் இனந்தெரியாத நபர்களினால் எமது ஆலயத்தில் உள்ள விக்கிரகங்கள் இடித்தழிக்கப்பட்ட செய்தி அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது.

அதன் பின்னர் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றின் கட்டளைக்கு அமைவாக மீளவும் தெய்வ திருவுருக்கள் எழுந்தருளச் செய்யப்பட்டு, தொடர்ச்சியாகப் பன்னிரெண்டு நாட்கள் பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பூஜை வழிபாடுகளின் இறுதி நாள் பூஜை . நாளை புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 2 மணிக்கு நிறைவு பெறும் என்பதனை அனைத்து அடியவர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

எனவே இறுதிநாள் பூஜை நிகழ்வில் அனைத்து அடியவர்களையும் கலந்து கொண்டு, எம்பெருமானின் ஆசியினைப்பெற்று செல்லுமாறு தெரிவித்துள்ளது. (4-6-33)

## கஞ்சாவுடன் இருவர் கைது

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தவசிகுளம் பகுதியில் 7கிலோ720கிராம் கஞ்சாவுடன் விசேட அதிரடி படையினரால் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மன்னாரில் இருந்து வருகை தந்த அதிரடிப்படையினரே குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்துடன் சந்தேக நபர்களையும் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)



தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்குடன் அரச திணைக்களங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் திட்டம் நாடளாவிய ரீதியில் பல்வேறு திணைக்களங்களில் இடம்பெற்று வருகின்றது. அந்தவகையில், கிளிநொச்சி மாவட்ட செயலக வளாகத்தில் கிளை ரீதியாக ஒதுக்கப்பட்டுள்ள, இடங்களில் தங்களது அலுவலக வளாக தோட்டப் பயிர்ச் செய்கையை இயற்கை வழி வேளாண்மையின் ஊடாக தொடர்ச்சியாக திறம்பட மேற்கொண்டு வருகின்றனர்.

(படம்- யதுபாஸ்கரன்)

# நவாலியூர் சிந்தாமணி விநாயகர் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நவாலியூர் அருள் மிகு ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய மஹோற்சவம் நாளை புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்று மாலை கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளன. (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறுகைகளுக்கான அறிவித்தல்
## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்
## வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு, சமைத்த உணவு வழங்குவதற்கான பெறுகைகள்
## 2023.07.01 தொடக்கம் 2024.06.30 வரை

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு ,சமைத்த உணவு வழங்குவதற்குத் தகைமையுள்ள விலைம்னுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலை மனுப்பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவை வழங்க வேண்டிய நிலையம் | கேள்வி உத்தரவாதமுறி |
|---|---|---|---|---|
| 01. | DH/CM/2023 - 2024 / 01 தொடக்கம் 17 வரை | சமைத்த உணவு வழங்கல் சேவை | பிரதேச வைத்தியசாலைகள் (யாழ். மாவட்டம்) | 20,000.00 |
| 02. | D/JF/2023 - 2024 /02 | உலர் உணவு வழங்கல் சேவை | ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை. | 130,000.00 |
| 03. | D/JF/2023- 2024/03 | | பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை. | 30,000.00 |
| 04. | D/JF/2023- 2024/04 | | ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி. | 130,000.00 |
| 05. | D/JF/2023 - 2024/05 | | பிரதேச வைத்தியசாலை, சங்கானை. | 22,000.00 |
| 06. | D/JF/2023 - 2024/06 | | ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறை. | 75,000.00 |
| 07. | D/JF/2023- 2024/07 | | பிரதேச வைத்தியசாலை, நெடுந்தீவு. | 10,000.00 |
| 08. | D/JF/2023 - 2024/08 | | பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி. | 17,000.00 |
| 09. | D/JF/2023 - 2024/09 | | பிரதேச வைத்தியசாலை, கோப்பாய். | 30,000.00 |

01. பெறுகைக் கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

அ.விலை மனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ.அத்துடன் தொடர்புடைய வழங்கு பொருட்களின் /சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ.அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 – பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, 572/3 வைத்தியசாலை வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் 021222 3725,021222 6253,0212214966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம். என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ் முகவரியில் வேலைநாட்களில் 09.00 மணிதொடக்கம் 15.00 மணிவரை பரிசீலிக்க முடியும்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 10.05.2023 ஆம் திகதி முதல் 23.05.2023 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையான காலப் பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா3,000.00 இனை அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

06. பெறுகை ஆவணங்கள் 24.05.2023 அன்று காலை 10.30 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள், பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலை மனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலை மனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் 19.05.2023 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப் பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும். என்பதுடன் இப்பிணைப்பணம் வங்கியில் செலுத்தி அவ் ஆவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.

09. இவ்விலை மனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப் பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ் விலைமனு கோரலை இரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன், தலைவர்,பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.**
**021-222-3725, 021-222-6253, 021-221-4966 தொலைநகல்: 021-222-[illegible]**
**மின்னஞ்சல்:** rdhsjaffna 15[illegible]

(C-6501)

## பெயர் மாற்றம்

காளி கோவிலடி பத்தமேனி அச்சுவேலியை வசிப்பிடமாகக் கொண்ட செல்லம்மா ஆகிய எனது பெயரை இன்று முதல் சரஸ்வதி எனப் பெயர் மாற்றம் செய்கிறேன். எனவே இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயக குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

(15493) **இ.சரஸ்வதி**

# பேருந்திலும் கியூ.ஆர் முறை அமைச்சர் பந்துல அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபை எக்காரணம் கொண்டும் தனியார் மயமாக்கப்படமாட்டாது என போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள டிப்போக்கள் சிலவற்றுக்கு புதிய பேருந்துகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இதன்போது, கருத்து தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்த்தன, எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகளில் கட்டணம் செலுத்தும் முறையை கியூ.ஆர் முறைக்கு மாற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (நி)

# தாமரைக் கோபுரத்தை பார்வையிட குவிந்த இலங்கை மக்கள்

(கொழும்பு)

கடந்த சனிக்கிழமை 12,204 பார்வையாளர்கள் தாமரை கோபுரத்திற்கு வருகை தந்துள்ளதாகவும் இந்த கோபுரம் பொதுமக்களுக்கு திறந்து வைக்கப்பட்டதன் பின்னர் அதிகளவான பார்வையாளர்கள் வருகை தந்த முதல் சந்தர்ப்பம் இது என அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்தாண்டு செப்டெம்பர் 15ஆம் திகதி தாமரை கோபுரம் பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்ட நிலையில் 815,982 பார்வையாளர்கள் இதனை பார்வையிட்டுள்ளனர்.

13,057 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தாமரை கோபுரத்தை பார்வையிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 120 | 150 |
| உருளைக்கிழங்கு | 160 | 200 | 190 |
| பச்சைமிளகாய் | 150 | 120 | 200 |
| தக்காளி | 200 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 200 |
| கோவா | 200 | 200 | 200 |
| கரட் | 160 | 200 | 300 |
| பூசணி | 60 | 50 | 60 |
| புடோல் | 100 | 140 | 120 |
| வாழைக்காய் | 100 | 100 | 60 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 130 | 130 |
| பாகற்காய் | 350 | 350 | 400 |
| வெண்டக்காய் | 120 | 140 | 150 |
| கருணைக் கிழங்கு | 120 | 90 | 120 |
| பயற்றங்காய் | 400 | 300 | 400 |
| லீக்ஸ் | 250 | 260 | 300 |
| பீற்றூட் | 220 | 200 | 240 |
| கறிமிளகாய் | 200 | 250 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 500 | 400 |
| போஞ்சி | 350 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 120 | 70 | 160 |
| கீரை – 1 பிடி | 100 | 100 | 150 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 300 | 300 |
| வெங்காயப்பூ | -- | -- | -- |
| முள்ளங்கி | 80 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 |
| வல்லாரை | 40 | 25 | 50 |
| ஈரப்பலா | 100 | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் சிறுவர்களைக் கடத்தும் மர்மக் கும்பல் நடமாட்டம்

## எச்சரிக்கையுடன் இருக்குமாறு அரச அதிபர் தெரிவிப்பு

**(மன்னார்)**

**மன்னாரில் சிறுவர்களை இலக்கு வைத்து அவர்களை கடத்தும் நோக்கில் சிலர் மன்னார் மாவட்டத்திற்குள் ஊடுருவி உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக நேற்று துரித விசாரணை முன்னெடுக்கப் பட்டதோடு பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ள தாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.**

இவ்விடயம் தொடர்பாக் அவர் மேலும் தெரிவிக் கையில்,

மன்னாரில் உள்ள பாட சாலை மாணவர் ஒருவரை வாகனம் ஒன்றில் வந்தவர்கள் இனிப்புப் பண்டங்களை வழங்கி குறித்த மாணவரை பலவந்தமாக ஏற்றிச் செல்ல முயற்சி செய்யப்பட்டதாக குறித்த மாணவர் தனது பெற்றோரிடம் தெரிவித்த நிலையில் குறித்த சம்பவம் தெரியவந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக குறித்த மாணவன் கல்வி கற்கும் பாடசாலைக்குச் சென்று விசாரணைகளை முன்னெடு க்கும் வகையில் நேற்றுக் காலை குறித்த பாடசாலைக்குச் சென்று மாணவ்னிடம் விசார ணைகளை மேற்கொண்டேன்.

இதன் போது மேலும் ஒரு மாணவனை நேற்று பாடசா லைக்குச் செல்லும் போது இனிப்புப் பண்டங்களை வழ ங்கி வாகனத்தில் ஏற்ற முற் பட்டதாக தெரிவித்துள்ளார். இச் சம்பவம் அதிர்ச்சியை ஏற்படு த்தியுள்ளது.

இவ்விடயம் குறித்து மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவ னத்திற்கு கொண்டு வந்துள்ள தோடு, பாடசாலை பகுதிகளில் விசேட பாதுகாப்பு நடவடிக் கைகளை முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளேன்.

மாணவர்கள் கவனம் தொடர்பாக பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் விழிப்புடன் செயற்பட வேண்டும். குறித்த சம்பவ ங்கள் குறித்து மன்னார் வலயக் கல்வி பணிப்பாளர் என்னுடன் தொடர்பை ஏற்படு த்தி துரித நடவடிக்கைகள் முன்னெடுப்பதாக தெரிவி த்துள்ளார்.

எனவே சந்தேகத்திற் கிடமான வாகனங்களின் நட மாட்டம் தெரிந்தால் உடனடி யாக பொலிஸாரின் கவனத் திற்கு கொண்டு வாருங்கள் என அவர் மேலும் தெரிவித் தார். (4-6-285)

# பாலத்தை புனரமைக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு அருகில் அமைய பெற்றுள்ள பாலம் கடந்த 2020 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவே கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

அருகில் தற்காலிக பாதை ஒன்று அமைக்கப்பட்டு அதிலும் மக்கள் செல்ல முடியாத நிலை யில் குன்றும் குழியுமாக காண ப்படுகிறது. இதனால் நோயா ளர்கள் , நோயாளர்கள் காவு வண்டி மற்றும் கனரக வாகன ஓட்டுநர்கள் எனப் பலர் அசௌ கரியங்களை எதிர்நோக்கி வரு கின்றனர்.

எனவே இது தொடர்பாக சம்ப ந்தப்பட்ட அதிகாரிகள் இப் பாலத்தினை விரைந்து புனர மைத்து மக்கள் பயன்பாட்டுக்கு பெற்றுத் தருமாறு அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர். அத்துடன் இப்பாலத்தின் தற்போதைய நிலை தொடர்பாக நேற்று முன்தினம் பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேரில் சென்று பார் வையிட்டுள்ளார். (4-6-316-315)

# உவர் நிலங்களாக விவசாய காணிகள் மாற்றமடைவதால் பயிர்ச்செய்கை பாதிப்பு

## கிளி.விவசாய அமைப்புகள் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அதிகளவான விவ சாயக் காணிகள் உவர் நில ங்களாக மாற்றமடைந்துள்ளன. குறிப்பாக கரையோரப் பகுதி களிலே காணப்பட்ட உவர்நீர் தடுப்பணைகள் சேதமடை ந்துள்ளமை மற்றும் கடல் நீர் உட்புகுதல் என்பவற்றின் காரணமாக உவர்பரம்பல் அதி கரிப்பதாக விவசாய அமை ப்புக்கள் தெரிவித்துள்ளன.

அதாவது கிளிநொச்சி மாவட்டத்தின் உருத்திரபுரம், வன்னேரிக்குளம் ,பள்ளிக்குடா, பூநகரி, ஆகிய பிரதேசங்களில் அதிகளவான நிலப்பரப்பு உவர் நிலங்களாக அடையாளம் காணப்பட்டு ள்ளன. மேற் குறித்த பிரதேச ங்களில் சுமார் 1672 கெக்ரேயர் நிலப்பரப்பு உவர்நில பிரதே சங்களாக



அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 1029 கெக்ரேயர் நிலப்பரப்பு விவ சாயிகளால் பயிர்ச்செய்கை களுக்கு உட்படுத்தப்பட்டு வரும் நிலையில் குறைவான விளை ச்சல்களை பெறுவதுடன் சில இடங்களில் மேற்கொள்ளப் படும் பயிர்ச் செய்கைகள் உவர் பாதிப்பு காரணமாக அழிவ டைந்தும் வருகின்றன.

ஏனைய 643 கெக்ரேயர் நிலப்பரப்பு எந்தவித பயிர்ச் செய்கைகளையும் மேற் கொள்ள முடியாத நிலப்பரப்பு களாக காணப்படுகின்றன. எதிர் காலத்தில் மண்டைக் கல்லா ற்றுக்கான உவர் நீர்த்தடுப் பணை அமைத்தல் மற்றும் ஏனைய கரையோரப்பகுதி களில் உவர் நீர்த்தடுப் பணை களை அமைப்பதன் மூலம் இவ்வாறான உவர் நிலங்களை பயிர்ச்செய்கை நிலங்களாக மாற்றியமைக்க முடியுமென தெரிவித்துள்ளனர். (4-6-315)

# மன்னாரில் தொல்பொருட்களுடன் மூவர் பொலிஸாரால் கைது



(மன்னார்)

தொல்பொருள் என சந்தே கிக்கப்படும் பொருள் ஒன்றுடன் இரு பெண்கள் உட்பட மூவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மன்னார் பாலம் சோதனை சாவடியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் எருக்கலம்பிட்டி பகுதியை சேர்ந்த மூவரே மேற் கண்டவாறு கைது செய்யப்பட் டுள்ளனர்.

மன்னார் பாலம் பிரதான சோதனை சாவடியில் மேற் கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையின் போது தொல் பொருள் என சந்தேகிக்கப்படும் சிறிய அளவிலான பொருள் ஒன்றை தம் உடைமையில் வைத்திருந்ததன் அடிப்படை யில் குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரையும் சந் தேகத்தின் பெயரில் கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணையின் பின்னர் மன்னார் நீதிவான் நீதிமன் றத்தில் ஆஜர்படுத்த நடவடி க்கை எடுத்தனர். (4-6-285)

# கிளிநொச்சியில் 40 வீத காணி படையினர் வசமே உள்ளது

## சிறீதரன் எம்.பி தெரிவிப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி நகரத்தில் உள்ள நாற்பது வீதமான அரச மற்றும் தனியார் காணிகள் படையினர் வசம் உள்ளதால் நகரத்தின் அபிவிருத்தியில் எந்த முன்னேற்றத்தையும் எட்ட முடியாது என்று பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கிளிநொச்சி நகரத்தின் நகர அபிவிருத்தி தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்து ள்ளார். தொடர்ந்து குறிப்பிடுகை யில் கிளிநொச்சி நகரத்தின் மையப் பகுதியில் அமைந்து ள்ள டிப்போ சந்தியில் உள்ள காணியினை படையினர் ஆக்கிரமித்து வைத்திருப்பது டன் அதனை இராணுவத்தினர் தன்னிச்சையாக அள வீடு செய் துள்ளனர். அதாவது அளவீடு செய்யப்படுவது தொடர்பில் பிரதேச செயலாளருக்கோ அல் லது மாகாண காணி ஆணை யாளருக்கோ தெரியாது. இங்கு இராணுவ நிர்வாகமே நடை பெறுகின்றது என்பதைகாட்டி நிற்கின்றது.

குறிப்பாக நகரத்தில் அதிக மக்கள் பயன்படுத்துகின்ற டிப்போ சந்தியில் ஒரு சுற்று வட்ட பாதையை கூட அமைக்க முடியாத அளவுக்கு காணி களை இராணுவம் வைத்திரு க்கின்றது. அதேபோல கிளி நொச்சி நகரத்தில் உள்ள நாற் பது வீதமான காணிகள் இன்றும் படையினரின் கட்டுப் பாட்டில்இருந்து வருகிறது ஏ-9 வீதியின் அறிவியல் நகர் முதல் ஆனையிறவு வரைக்குமுள்ள அதிகளவான அரச மற்றும் தனியார் காணிகள் இராணுவ த்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டு ள்ளன.

குறிப்பாக நகரத்தில் இவ் வாறு அதிகளவான காணிகள் படையினர் வசம் இருப்பது என்பது இராணுவ் அடக்கு முறையை சித்தரிக்கின்றது என்று அவர் மேலும் தெரி வித்துள்ளார். (4-6-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றோயல் கல்லூரி-கொழும்பு
# க.பொ.த (சா/த) மூன்றாம் தவணைப் பரீட்சை
# வரலாறு பகுதி - II

## பகுதி II

பகுதி I இல் 1ம் வினாவிற்கும்
பகுதி II இல் நான்கு வினாக்களுக்கும்
பகுதி III இல் விரும்பிய ஏதாவது ஒரு வினாவுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி I

1) அ) கீழே (I) இல் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (II) இல் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை உலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i) வளவகங்கை, மல்வத்து ஓயா, அநுராதபுரம், ஹூருளுவாவி, தம்பதெனியா, கதிர்காமம், லங்காபட்டின, கேதீஸ்வரம், காலி, இப்பன்கட்டுவ, கண்டி, நெடுந்தீவு

(12 புள்ளிகள்)

(ii) இத்தாலி, கல்கத்தா, மலாக்கா நீரிணை, கொன்ஸ்தாந்தி நோபிள், பிரித்தானியா, டோக்கியோ

(6 புள்ளிகள்)

ஆ) I கீழே A,B,C,D யில் காட்டப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுக்கான விடைகளினை முறையே உமது விடைத் தாளில் எழுதுக.

A - கம்பளை இராச்சியத்தின் முதல் ஆட்சியாளன்.
B – ஆங்கிலேயர் ஆக்கிரமிப்பின் போது ஸ்ரீவிக்கிரம இராஜசிங்க மன்னன் தலைமறைவாகிய பிரதேசம்.
C – போர்த்துக்கேயர்கள் இலங்கையினை அழைத்த விதம்.
D- அணிசேர் நாடுகளின் மகாநாடு நிறுவப்படுவதற்கு வழி காட்டியாகத் திகழ்ந்த இந்தியப் பிரதமர்.

A மற்றும் B யில் கொடுக்கப்பட்டுள்ள படத்தினை அடிப் படையாகக் கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

படம் A



1. A உருவில் காட்டப்படும் நிர்மாணிப்பின் பெயர் என்ன?
2. இது எப்பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டது?
3. இது எத்தேவைக்காக பயன்படுத்தப்பட்டது?
4. இந்நிர்மாணம் எவ் வரலாற்றுக் காலத்திற்கு உரியதாகும்?

(4 புள்ளிகள்)

படம் B
III.



1. B உருவில் காணப்படுபவரின் பெயர் என்ன?
2. அவர் எவ் இனத்தைச் சேர்ந்தவர்?
3. இவரும் இவரின் மனைவியும் கொலை செய்யப்பட்ட நகரம் எது?
4. இந்நிகழ்வினை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப் பட்ட யுத்தம் எது?

(4 புள்ளிகள்)

### பகுதி II

2) 1. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த இடங்கள் A,B,C யினால் காட்டப்பட்டுள்ளது. இவ் இடங்களுக்கு உரிய சுற்றாடல் வலயங்களை ஒழுங்கு முறையாக உங்கள் விடைத் தாளில் எழுதுக?

A- பொம்பரிப்பு
B- ராவணா எல்ல
C – பட்டதொம்பலென

(3 புள்ளிகள்)

II. A- வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் கல்லாயுதங்களை எவற்றினால் தயாரித்தான்?

(2 புள்ளிகள்)

B- இவர்கள் உணவினைப் பெற்றுக் கொண்ட தாவர வகைகள் இரண்டினை எழுதுக?

(2 புள்ளிகள்)

III. முன்வரலாற்றுக் காலத்தில் மனிதனின் வாழ்க்கை முறையில் காணப்பட்ட அம்சங்களை விளக்குக?

(5 புள்ளிகள்)

IV. வரலாற்றுக் காலக் குடியேற்றத்தின் கட்டமைப்பினையும் அதன் தன்மையினையும் மூன்று விடயங்களின் அடிப் படையில் விளக்குக?

(6 புள்ளிகள்)

3) i. அரச கோட்பாடுகள், எண்ணக்கருக்கள் வளர்ச்சியுற்ற முறைகள் மூன்றினைக் குறிப்பிடுக?

(3 புள்ளிகள்)

ii. கீழே காணப்படும் வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர் புடைய மன்னர்களைக் குறிப்பிடுக?

A- பத்தினி தெய்வக் கோயில் ஒன்றின் திறப்பு விழாவிற்காக இந்தியாவின் சேர நாட்டிற்குச் சென்றவன்.
B- இலம்பகர்ண வம்சத்தின் முதல் ஆட்சியாளன்.
C- தனது பத்தாவது ஆட்சி வருடத்தில் நாட்டின் கிராம எல்லைகளை வகுத்தவன்.
D- சோழ ஆட்சியாளர்களிடமிருந்து பொலநறுவையை விடுவித்தவன்.

(4 புள்ளிகள்)

iii. துட்டகைமுனு மன்னன் காலத்தில் இடம்பெற்ற முக்கியமான விடயங்கள் இரண்டினை விளக்குக?

(5 புள்ளிகள்)

iv. முற்காலத்தில் எமது நாட்டில் வளர்ச்சியடைந்த வைத் தியத்துறை காணப்பட்டதற்கான ஆதாரங்களை மூன்று விடயங்களின் அடிப்படையில் விளக்குக.

(6புள்ளிகள்)

4) i. கீழே தரப்பட்டுள்ள குளங்களைக் கட்டிய மன்னர்களைக் குறிப்பிடுக?

A- கவுடுளுவாவி
B- பதவியாக்குளம்
C – பராக்கிரம சமுத்திரம்

(3 புள்ளிகள்)

ii. கீழே A முதல் D வரை தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்கு பொருத்தமான; விடையினை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக?

A- இடி மின்னலில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக பாரிய தூபிகளின் மேல் இடிதாங்கி பொருத்தப்பட்டமை.

B- குளத்தில் ஏற்படும் நீர் அலையினால் குளக்கட்டு அரித்து செல்வதைத் தடுக்க அமைக்கப்பட்ட நிர்மாணம்.

C- கந்தளாய் மற்றும் கிரிதலை வாவிகளுக்கு நீரினைக் கொண்டு செல்லும் கால்வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

D- நெல்மணி அளவிலான தங்கத்தில் 21 பூ வேலைப்பாடுகள் கொண்ட தங்கம் கண்டுபிடிக்கப்பட்டமை.

(தெடிகம யானை விளக்கு, அலைதாங்கி, யோதவாவி, எலஹர, அபயகிரி, ருவன்வெலிசாய , ஜேத்வனராம) ( 4 புள்ளிகள்)

iii. முற்கால ஆட்சியாளர்கள் பாரிய குளங்களை நிர்மாணித்ததன் நோக்கங்கள் இரண்டினைக் கூறி விளக்குக? ( 5 புள்ளிகள்)

iv. பொலநறுவை இராசதானி வீழ்ச்சியடைவதற்கான காரணங்கள் மூன்றினைக் கூறி விளக்குக? (6 புள்ளிகள்)

5) i. கண்டி இராச்சியத்திற்குப் பாதுகாப்பு வழங்கிய ஆற்றினையும் கடினமான பாதைகள் இரண்டினையும் குறிப்பிடுக? ( 3 புள்ளிகள்)

ii. கீழே A முதல் D வரை தரப்பட்ட தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை முறையே எழுதுக?

A- கண்டி இராச்சியத்தின் முதல் மன்னன்.

B- கி.பி 1602 ஆம் ஆண்டு கண்டியை ஆக்கிரமித்த போர்த்துக்கேயத் தளபதி.

C- நாயக்க அரச வம்சத்தின் முதல் மன்னன்.

D- கி.பி 1638 இல் ஒல்லாந்தருடன் ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக் கொண்ட கண்டி இராச்சிய மன்னன் . ( 4 புள்ளிகள்)

iii. முதலாம் விமலதர்மசூரிய மன்னனால் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் இரண்டினைக் கூறி விளக்குக? ( 5 புள்ளிகள்)

iv. கண்டி இராச்சியத்தின் சமூக அமைப்பின் மூன்று விடயங்களினை உதாரணங்கள் மூலம் விளக்குக? (6 புள்ளிகள்)

6) i. கி.பி 1798 இல் இருந்து கி.பி 1815 வரையான காலத்தில் இலங்கையினை ஆட்சி செய்த பிரித்தானிய ஆளுநர்கள் மூவரினைக் குறிப்பிடுக? ( 3 புள்ளிகள்)

ii. கீழே A,B,C,D யினால் தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடையினைக் குறிப்பிடுக?

A- கி.பி 1762 இல் மலைநாட்டுக்கு வருகை தந்து கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனை சந்தித்த ஆங்கிலேய தூதுவர்.

B- ஆங்கிலேயர் முதலாவதாக ஒல்லாந்தரிடம் இருந்து கைப்பற்றி ஆட்சிக்குட்படுத்தப்பட்ட கரையோரப் பிரதேசம்.

C - கி.பி 1815 கண்டி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஆங்கிலேய ஆளுநர்.

D- கி.பி 1848 ஆம் ஆண்டுப் போராட்டத்தின் பிரதான மத்திய நிலையமாக திகழ்ந்த பிரதேசம். ( 4 புள்ளிகள்)

iii A- பிரித்தானியர்களினால் எமது நாட்டில் பயிரிடப்பட்ட பெருந்தோட்டப் பயிர்கள் மூன்றினைக் குறிப்பிடுக? ( 2 புள்ளிகள்)

B- பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் வளர்ச்சிக்குக் காரணமான கோல்புறூக் ஆணைக்குழுவின் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் இரண்டினை விளக்குக? (3 புள்ளிகள்)

iv. பிரித்தானிய ஆட்சியினால் இந்நாட்டில் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் மூன்றினை விளக்குக? ( 6 புள்ளிகள்)

7) i. கீழே காணப்படும் அரசியல் கட்சிகள் உருவாகுவதற்கு காரணமானவர்களைக் குறிப்பிடுக?

A - இலங்கை சமசமாஜக் கட்சி
B - ஐக்கிய தேசியக் கட்சி
C- ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (3 புள்ளிகள்)

ii. கீழே தரப்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் எவ் அரசியல் மறுசீரமைப்பின் கீழ் உருவாக்கப்பட்டது என்பதைக் குறிப்பிடுக?

A - சட்டவாக்கக் கழகம் அமைக்கப்பட்டமை.

B - சட்டவாக்கக் கழகத்திற்கு முதன்முறையாக வாக்குரிமை மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டமை.

C- சட்டவாக்கக் கழகத்தில் முதன்முறையாக உத்தியோக சார்பற்றோர் பெரும்பான்மை பெற்றமை.

D -செனட் சபைக்கு 30 அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டமை. ( 4 புள்ளிகள்)

iii. இந்நாட்டில் உலர் வலயத்தில் விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் இரண்டினைக் கூறி விளக்குக? ( 5 புள்ளிகள்)

iv. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக? ( 6 புள்ளிகள்)

## பகுதி III

8) i. மறுமலர்ச்சிக் காலத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட கல்வி சீர்திருத்தத்தினால் இலக்கியத் துறைக்குப் பணியாற்றிய இங்கிலாந்து எழுத்தாளர்கள் மூவரைக் குறிப்பிடுக. ( 3 புள்ளிகள்)

ii. கீழே தரப்பட்டுள்ள தகவல்களை கண்டுபிடித்தவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக?

A- கோள்கள் அனைத்தும் சூரியனை நீள்வட்டப்பாதையில் சுற்றி வருதல்.
B- புவியீர்ப்பு சக்தி.
C- மனித உடலின் குருதிச் சுற்றோட்டம் தொடர்பான முக்கிய தகவல்கள்.
D- அச்சு இயந்திரம் தயாரித்தல். ( 4 புள்ளிகள்)

iii. நாடுகாண் பயணங்கள் மேற்கொள்வதற்கு ஏதுவான காரணங்கள் இரண்டினை விளக்குக? ( 5 புள்ளிகள்)

iv. ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் தாக்கம் காரணமாக இலங்கையில் அரசியல், பொருளாதார மற்றும் சமூகப் பண்பாட்டு மாற்றங்கள் ஒவ்வொன்று வீதம் குறிப்பிட்டு விளக்குக? ( 6 புள்ளிகள்)

9) i. பிரித்தானிய பிரதமர் ஜோன் கிரன்வில் கி.பி 1764, 1765, ஆகிய ஆண்டுகளில் அமெரிக்கக் குடியேற்றங்களுக்கு விதிக்கப்பட்ட புதிய சட்டங்கள் மூன்றினைப் பெயரிடுக? ( 3 புள்ளிகள்)

ii. கீழே A,B,C,D யினால் காட்டப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய பொருத்தமான விடையினை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக?

A- அமெரிக்க சுதந்திரப்போர் ஆரம்பிப்பதற்கு ஏதுவான நிகழ்வு.
B- "நானே அரசு" எனக் கூறியவன்.
C- சட்டத்தின் சாரம் என்ற நூலினை எழுதியவர்.
D- ரஷ்யப் புரட்சிக்கு தலைமை தாங்கியவர்.
( வோல்டேயர், மொன்டெஸ்கியூ, கெரன்ஸ்கி, வீ.ஐ. லெனின், வியோர்ன் ; ட்றொஸ்கி, பொஸ்டன் தேநீர் விருந்து, 14 ஆம் லூயி மன்னன்) ( 4 புள்ளிகள்)

iii. பிரான்சியப் புரட்சிக்கான ஏதுவான சமூகக் காரணங்கள் இரண்டினைக் கூறி விளக்குக? ( 5 புள்ளிகள்)

iv. ரஷ்யப் புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகளை பொருளாதார, அரசியல் ரீதியாக ஒவ்வொரு உதாரணங்களுடன் விளக்குக? ( 6 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 140

# மன்று வழங்கிய தீர்ப்பு



ஒரு பதினைந்து வயதுச் சிறுவன் கடையில் ரொட்டி திருடும் போது பிடிபட்டுவிட்டான். காவலாளியின் பிடியில் இருந்து தப்பிக்க முயன்ற போது, கடையின் அலுமாரியும் உடைந்தது. கோபம் அடைந்த கடை உரிமையாளர் சிறுவனை பொலிஸாரிடம் பிடித்துக் கொடுத்தார். பொலிஸார் சிறுவனை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

நீதிபதி குற்றத்தை விசாரித்து அந்தச் சிறுவனிடம், "உண்மையில் நீங்கள் ஏதாவது ரொட்டி மற்றும் பாலாடைக்கட்டி திருடினீர்களா? எனக் கேட்டார்.

சிறுவன் கீழே பார்த்துக் கொண்டு பதிலளித்தான்.. "ஆம்."

நீதிபதி:- "ஏன்?"

சிறுவன்: - "எனக்கு அது தேவைப்பட்டது."

நீதிபதி: - "நீங்கள் அதனை வாங்கியிருக்க முடியாதா?"

சிறுவன்: - "பணம் இல்லை."

நீதிபதி: - "குடும்பத்திடம் இருந்து பெற்றுக் கொண்டிருக்கலாமே."

சிறுவன்:- "வீட்டில் நோய்வாய்ப்பட்டு அம்மா மட்டும் தான் இருக்காங்க?"

நீதிபதி: - "நீங்கள் எதுவும் செய்யவில்லையா?"

சிறுவன்: - "கார் கழுவுவது வழக்கம். என் அம்மாவைக் கவனித்துக் கொள்ள ஒரு நாள் விடுமுறை எடுத்த போது, நான் வேலையிலிருந்து நீக்கப்பட்டேன்."

நீதிபதி: - "நீங்கள் யாரிடமும் உதவி கேட்கவில்லையா?"

சிறுவன்: - "காலையிலிருந்து வீட்டை விட்டு வெளியேறி, சுமார் ஐம்பது பேரிடம் சென்று உதவி கேட்டேன். ஆனால் ஒருவரும் உதவவில்லை. எனவே, இந்த நடவடிக்கையை நான் கடைசியாக எடுக்க முடிவு செய்தேன்.வாதங்கள் முடிந்ததும் நீதிபதி தீர்ப்பை சொல்லத் தொடங்கினார்.

குறிப்பாகப் பசியுள்ள சிறுவன் ரொட்டி திருடுவது மிகவும் வெட்கக்கேடான குற்றமாகும். இந்தக் குற்றத்திற்கு நாம் அனைவரும் பொறுப்பு.

நான் உட்பட நீதிமன்றத்தில் உள்ள ஒவ்வொரு நபரும் குற்றவாளிகள். எனவே, இங்கு இருக்கும் ஒவ்வொரு நபருக்கும் தலா பத்து டொலர்கள் அபராதம். பத்து டொலர் கொடுக்காமல் யாரும் இங்கிருந்து வெளியேற முடியாது.

இவ்வாறு கூறி, நீதிபதி தனது பக்கெட்டிலிருந்து பத்து டொலரை எடுத்து வைத்தார்.

மேலும், பசித்த சிறுவனை பொலிஸிடம் ஒப்படைத்ததற்காக கடைக்கு ஆயிரம் டொலர் அபராதம் விதிக்கிறேன்.

24 மணி நேரத்திற்குள் அபராதத் தொகையை டெபாசிட் செய்யாவிட்டால் கடைக்கு சீல் வைக்க நீதிமன்றம் உத்தரவிடும்.

மேலும், பட்டினி கிடக்கும் சிறு-வனை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ததற்காக காவல்துறைக்கு அதே தொகை அபராதம் விதிக்கப்படுகிறது.

இந்தச் சிறுவனுக்கு அபராதத் தொகை முழுவதையும் கொடுத்து அந்தச் சிறுவனிடம் நீதிமன்றம் மன்னிப்புக் கேட்கிறது.

தீர்ப்பைக் கேட்டதும் நீதிமன்றத்தில் இருந்தவர்களின் கண்களில் இருந்து கண்ணீர் கொட்டியது. அந்தச் சிறுவனின் கைவிலங்குகளும் அவிழ்க்கப்பட்டன. கண்ணீரை மறைத்துக் கொண்டு வெளியே வந்த நீதிபதியைச் சிறுவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# உல்லாசப் படகு கவிழ்ந்ததில் 21 பேர் உயிரிழப்பு

## கேரளாவில் சோகம்



(கேரளா)

இந்தியாவின் கேரளா மாநி லத்தில் உல்லாசப் படகு ஒன்று கவிழ்ந்ததால் சுமார் 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

மலப்புரம் மாவட்டத்தின் தனூர் பரப்பனங்காடி கடற் கரையில் நேற்று முன்தினம் இரவு இப்படகு கவிழ்ந்தது. மீட்பு நடவடிக்கைகள் நேற்றும் தொடர்ந்தன.

இரண்டு அடுக்குக்களைக் கொண்ட இந்த சுற்றுலா படகில் சுமார் 50 பேர் பயணம் செய்தனர்.

அதிக எண்ணிக்கையானோர் பயணம் செய்தமையே இச்சம்பவத்துக்கு காரணம் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (நி)

## இந்திய விமானப்படையின்

# மிக் விமானம் விழுந்ததில் மூன்று பொதுமக்கள் பலி

(டில்லி)

இந்திய விமானப்படை விமானமொன்று, வீடொன்றின் மீது வீழ்ந்ததால் பொது மக்கள் மூவர் பலியானதுடன் மேலும் சிலர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். ராஜஸ்தான் மாநிலத்தின் சூரத்கார் நகருக்கு அருகில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ரஷ்ய தயாரிப்பான மிக் - 21 ரக விமானமொன்றே இவ் வாறு வீழ்ந்துள்ளது.

இவ்விமானம் வீழ்ந்ததை இந்திய விமானப் படை உறுதிப்படுத்தியுள்ளது. அதேவேளை விமானத்தின் விமானி விமானத்திலிருந்து வெளியேறப்பட்டு உயிர் தப்பியுள்ளார் எனவும் தெரிவித்துள்ளது. (நி)

# நேபாளத்தில் பனிச்சரிவு

## 3 பேர் உயிரிழப்பு

(நேபாளம்)

நேபாள நாட்டில் உள்ள கர்னாலி மாகாணத்தில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம் முகு மாவட்டத்தின் சியார்கு கணவா யில் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் சம்பவத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 9 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். தகவலறிந்து சென்ற மீட்புக்குழுவினர் காயம் அடைந்த 9 பேரையும் மீட்டு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். (நி)

# உக்ரைனில் தனது தரப்புகளை வெளியேற்றும் ரஷ்யா அணுவாலையை அண்மித்த பகுதிகளில் பதற்றம்

(உக்ரைன்)

உக்ரைனின் ஸப்போரிஷ்ஷியா அணுவாலையை அண்மித்த பகுதிகளில் இருந்து ரஷ்யா தனது தரப்புக்களை வெளியேற்றத் தொடங்கியுள்ளதாக கூறப்படுகின்றது.

இதனால், குறித்த இடங்களில் பதற்றமான சூழ்நிலை அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் அனைத்துலக அணுசக்தி அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறித்த பகுதியில் உக்ரைனிய படையினர் வான் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளதுடன், அப்பகுதிகளில் உள்ள சிறுவர்கள், முதியோர்களை கொண்டுள்ள ரஷ்யக் குடும்பங்களை வெளியேறும்படி ரஷ்யா கேட்டுக் கொண்டுள்ளது.

இந்நிலையில், அனைத்துலக அணுசக்தி அமைப்பின் எச்சரிக்கை வெளிவந்துள்ளது. அதேசமயம், உக்ரைனின் மைக்கொலைவ் பகுதிகளில் ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்களை நேற்று முன்தினம் அதிகரித்ததாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தொழில்துறை வட்டாரங்களை குறிவைத்து ரஷ்யாவின் தாக்குதல்கள் இடம்பெறுவதாக கூறப்படுகின்றது. (நி)

# இந்திய எல்லைக்குள் பாகிஸ்தான் விமானம்

(டில்லி)

பாகிஸ்தான் ஏர்லைன்ஸ் விமானம் திடீரென இந்திய வான் எல்லைக்குள் நுழைந்ததால் இந்தியாவில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த பாகிஸ்தான் விமானம் சுமார் பத்து நிமிடங்கள் இந்திய வான்பரப்பில் இருந்துள்ளதுடன் விமானம் இந்தியாவுக்குள் நுழைந்தவுடன் இராணுவம் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளது.

லாகூரில்தரையிறங்க வேண்டிய பாகிஸ்தானைச் சேர்ந்த பயணிகள் விமானம் கன மழை காரணமாக தவறுதலாக இந்திய வான்பரப்புக்குள் நுழைந்த நிலையில், அதிகாரிகளின் அனுமதி பெற்று மாற்றுப் பாதையில் பத்திரமாக பாகிஸ்தான் சென்றடைந்துள்ளது.

மோசமான வானிலையால் விமானி பாதையைத் தவறவிட்ட நிலையில், விமானம் இந்திய வான்பரப்புக்குள் நுழைந்துள்ளதாக இந்திய விமான கட்டுப்பாட்டு அறைக்கு விமானி விளக்கமளித்த நிலையில் வான்பரப்பை பயன்படுத்திக்கொள்ள இந்திய அதிகாரிகள் அனுமதியளித்துள்ளனர்.

அல்லாமா இக்பால் சர்வதேச விமான நிலையத்தில் விமானத்தைத் தரையிறக்க விமானி முயன்ற போதும் அவை வெற்றியளிக்காத காரணத்தினால் இந்திய எல்லைப் பகுதிக்குள் நுழைய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக விமானி தனது அறிக்கையில் விளக்கமளித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 173





"கண்மணி! என்ன விரதம், என்ன நோன்பு என்பதை மட்டும் தெளிவாகச் சொல்லிவிடு! எவ்வளவு சீக்கிரம் முடித்துத் தரலாமோ அவ்வளவு சீக்கிரத்தில் முடித்துத் தருவேன்!" என்றார் பழுவூர் அரசர்.

"தன்னைக் காட்டிலும் மன்மதன் வேறு இல்லை என்று எண்ணியிருக்கும் இந்தச் சுந்தர சோழருடைய சந்ததிகள் தஞ்சைச் சிம்மாசனத்தில் ஏறக்கூடாது. தற்பெருமை கொண்ட அந்தக் குந்தவையின் கர்வத்தை ஒடுக்க வேண்டும்"

"நந்தினி! அந்த இரண்டு காரியங்களும் நிறைவேறி விட்டதாகவே நீ வைத்துக் கொள்ளலாம். ஆதித்தனுக்கும் அருள்மொழிவர்மனுக்கும் பட்டம் கிடையாது. மதுராந்தகனுக்கே பட்டம் கட்ட வேண்டும் என்று இந்த ராஜ்யத்தின் தலைவர்கள் எல்லாரும் சம்மதித்து விட்டார்கள்"

"எல்லாரும்' சம்மதித்து விட்டார்களா? உண்மை தானா?" என்று நந்தினி அழுத்தமாகக் கேட்டாள்.

"இரண்டு மூன்று பேரைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் சம்மதித்து விட்டார்கள். கொடும்பாளூரானும் மலையமானும் பார்த்திபேந்திரனும் நம்முடன் என்றும் இணங்க மாட்டார்கள். அவர்களைப் பற்றிக் கவலையில்லை"

"ஆயினும் காரியம் முடியும் வரையில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியதுதானே?"

"அதற்குச் சந்தேகம் இல்லை. எல்லா ஜாக்கிரதையும் நான் செய்து கொண்டு தான் வருகிறேன். மற்றவர்களின் முட்டாள்த்தனத்தினால் பிசகு நேர்ந்தால்தான் நேர்ந்தது.

இன்றைக்குக் கூட அத்தகைய பிசகு ஒன்று நேர்ந்திருக்கிறது. காஞ்சியிலிருந்து வந்த ஒரு வாலிபன் காலாந்தகனை ஏமாற்றி விட்டுச் சக்கரவர்த்தியைச் சந்தித்து ஓலை கொடுத்திருக்கிறான்."

"ஆகா! தங்கள் தம்பியைப் பற்றி தாங்கள் ஓயாமல் புகழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். அவருக்குச் சாமர்த்தியம் போதாது என்று நான் சொல்லவில்லையா?"

"இந்த விடயத்தில் அசட்டுத்தனமாகத்தான் போய் விட்டான்! ஏதோ நம் அரண்மனை முத்திரை மோதிரத்தை அந்த வாலிபன் காட்டியதாகச் சொல்கிறான்!"

"ஏமாந்து போனவர்கள் இப்படித்தான் ஏதாவது காரணம் சொல்லுவார்கள்! ஏமாற்றிய அந்த வாலிபனைப் பிடிக்க முயற்சி ஏதும் செய்யவில்லையா?"

"முயற்சி செய்யாமல் என்ன? கோட்டைக்கு உள்ளேயும் வெளியேயும் வேட்டை ஆரம்பமாகி விட்டது! எப்படியும் பிடித்து விடுவார்கள். இதனாலெல்லாம் நம்முடைய காரியத்துக்கு ஒன்றும் பங்கம் வந்து விடாது. சக்கரவர்த்தி காலமானதும் மதுராந்தகன் சிம்மாசனம் ஏறுவது நிச்சயம்."

"நாதா! என்னுடைய விரதம் என்னவென்பதைத் தங்களுக்குத் தெரியப்படுத்தும் காலம் இப்போது நெருங்கி வந்து விட்டது"

"கண்ணே! அதைச் சொல்லும்படி தான் நானும் கேட்கிறேன்.."

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்




ஒரு பெருநகரத்தில் பவானி என்கிற குட்டி பெண் குழந்தை வாழ்ந்து வந்தாள். பவானியின் அப்பா அம்மா இருவரும் அந்த நகரத்தில் வேலை செய்து வந்தனர். பவானியின் பெற்றோர் அவள் மீது அதிக பாசம் வைத்திருந்தனர்.

அதனால் அவள் என்ன கேட்கி றாளோ அது அவளுக்குக் கிடைக்கும். பவானியை ஒரு ராணி போல வளர்த்து வந்தனர். அதே சமயம் அவளுக்கு ஒழுக்கத் தையும் நேர்மையையும் சொல்லி கொடுத்து வளர்த்தனர்.

அவர்கள் எப்போதெல்லாம் சந்தைக்கு செல்கிறார்களோ அப்போதெல்லாம் பவானிக்கு பரிசுகள் வாங்கி வருவார்கள். அவள் செய்யும் நற்செயல்களை மனம் வியந்து பாராட்டி பரிசு வழங்குவார்கள். பரிசும் பாராட்டும் வாங்குவதற்காகவே பவானி நற்பண்புகளை வளர்த்து கொள்வாள். அதே நேரத்தில் தனது வகுப்பில் படுசுட்டியாக இருப்பாள். பவானி ரொம்ப புத்திசாலி. படிப்பில் சிறந்து விளங்கினாள். மற்றவர்களுக்கு எப்பவும் உதவும் மனப்பாள்மை உடையவள். வகுப்பில் நிறைய நண்பர்களை கொண்டிருந்தாள்.

வழக்கம் போல ஒரு நாள் சென்று தனது தோழி பக்கத்தில் உட்கார சென்றாள் பவானி. அப்போது அவள் தோழி ஜனனி சோகமாக அழுது கொண்டிருந்தாள். பவானி என்ன நடந்தது என்று வினவினாள். ஜனனி சொன்னாள், "நா தமிழ் மிஸ் ஸோட வீட்டுப் பாடம் முடிச்சுட்டு வந்தேன். அதை உமா பாத்துட்டு தரதாக சொல்லி வாங்கினாள். நானும் கொடுத்தேன். அதை வாங்கி கிழித்துவிட்டு சிரிக்கிறாள். கேட்டால் உன்னை எனக்கு பிடிக்காது.

அதனால தான் அப்படி பண்ணேன்னு சொல்றா" என்று கூறி அழுதாள். பவானி உமாவிடம், "ஏன் இப்படி நடந்துக்கிட்ட" என்று கோபமாக கேட்டாள். அதற்கு உமா "அன்னைக்கு ஒரு பேனா கேட்டதுக்கு உன்னோட தோழி தராம மிஸ் கிட்ட அடிவாங்க வெச்சா.

இப்போ அவ அடி வாங்கட்டும்" என்று சொல்லிச் சிரித்தாள். பவானி வேறு பேசுவதற்குள் தமிழ் ஆசிரியர் வகுப்பில் நுழைந்தார்.

உமா நினைத்தது போலவே வீட்டுப் பாடம் எழுதாதவர்களுக்கு ஆசிரியர் தண்டனை வழங்கினார். ஜனனி நடந்ததைச் சொல்லிப் பார்த்தாள். வகுப்பில் சராசரி மாணவியானதால் எழுதாமல் பொய் சொல்கிறாள் என ஆசிரியர் நம்பவில்லை. அதனால் வீட்டுப்பாடம் முடித்தும் ஜனனி தண்டனைக்கு உள்ளானாள். அன்று முழுவதும் அழுது கொண்டே இருந்தாள் ஜனனி. பவானிக்கு ஒரே கஷ்டமாக இருந்தது. உமாவுக்கு சரியான பாடம் புகட்ட நினைத்தாள்.

ஓரிரு நாட்கள் சென்றன. பவானி வகுப்பிற்கு விலை உயர்ந்த பேனாவை கொண்டு சென்றிருந்தாள். அனைவரும் அதை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆசிரியரிடமும் காட்டி தனது பெற்றோர் தனக்கு பரிசளித்ததாக சொல்லி மகிழ்ந்தாள். அன்று மதியம் உணவு இடைவேளை வந்தது. பவானி ஒரு திட்டம் போட்டாள். உமா வெளியே சென்ற சமயத்தில் தனது விலை உயர்ந்த பேனாவை உமாவின் பையில் போட்டுவிட்டாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக்கொள்ளும்
– எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எமது உரிமைக்கு முன்பான எம் ஒழுங்குபடுத்தல் எப்படியிருக்கிறது?

எமது உரிமைக்கான போராட்டம் இன்னமும் உயிர்ப்புடன் இருக்கிறதென்பதில் எந்தச் சந்தேகமும் கிடையாது.

தமிழை – தமிழ் இனத்தை – தமிழ் மண்ணை – நம் தமிழ் இளவல்கள் ஈந்தளித்த தியாகத்தை இன்னமும் தங்கள் இதயங்களில் பிரதிஷ்டை செய்து பூசிக்கின்ற தமிழ் உணர்வாளர்கள் இருக்கும்வரை தமிழ் இனத்தின் உரிமைக்கான குரல் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

இதை நாம் கூறும்போது, தவறியேனும் இது தமிழ் அரசியல்வாதிகளையும் உள்ளடக்கியுள்ளதாக யாரும் கருதிவிடாதீர்கள்.

ஏனெனில் தமிழ் அரசியல் என்பது சுய நலத்தின் விஸ்வரூபமாக மாறிவிட்டது.

எனவே இனி தமிழ் அரசியல் என்பது நம் இனத்தின் உரிமை விடயத்தில் தடையாக இருக்குமேயன்றி, உரிமைக்கதவைத் தட்டுகின்ற பலமாக இருக்கமாட்டாதென்பது தெட்டத்தெளிவு.

எதுஎவ்வாறாயினும் இங்கு நாம் பிரஸ்தாபிப்பது தமிழ் அரசியல் பற்றியதல்ல.

மாறாக எங்களின் உரிமைக்கு முன்பான எங்களின் நிர்வாகமும் சமூக குடும்பக் கட்டமைப்பும் எவ்வாறாக இருக்கிறதென்பதை ஒரு கணம் நாம் பார்த்தாக வேண்டும்.

ஆம், எங்கள் இளைஞர்களின் கணிசமானவர்கள் போதைவஸ்துக்கு அடிமையாகி தங்கள் வாழ்வைத் தொலைத்து நிற்கின்றனர்.

இன்னொரு தரப்பு மோட்டார் சைக்கிள் – தொலைபேசி – வீண்பொழுதுபோக்கு என நேரத்தை வீணடித்து தங்கள் பொன்னான காலத்தை அவமே கழிக்கின்றனர்.

இவை ஒருபுறம் நடந்தாக, மறுபுறத்தில் எங்கள் சமூக சிந்தனைகள் மிகவும் தரங்கெட்டுக் கிடப்பதைப் பார்க்கும்போது ஐயகோ! இனி இந்த மண்ணில் வாழ முடியுமா? என்று ஏங்கி அழுகின்ற அளவில் நிலைமை முற்றிவிட்டது.

உண்மை. வீட்டுக்கழிவுகளை வீதிகளில் கொட்டுகின்ற மனநிலை கொண்ட மனிதர்கள் வாழுகின்றபோது, வளர்த்த நாய்களை தெருவில் கைவிடுகின்ற கயமைத்தனங்கள் மலிந்தபோது,

தாம் மட்டும் வாழ்ந்தால் அதுபோதும் எனும் குறுகிய மனநிலை உச்சமெடுத்தபோது, வீதி விபத்தில் விழுந்து கிடந்து துடிக்கின்ற உயிரைக் காப்பாற்ற நினையாமல், அதனை வீடியோ பிடித்து முகநூலில் பதிவேற்றம் செய்வதை உன்னதம் என்று நினைக்கும் வக்கிர மனங்கள் மலிந்தபோது, நம் தமிழ் இனமா இப்படி என்று எண்ணத் தோன்றும்.

இதையும் தாண்டி எங்கள் கையில் உரிமை கிடைக்கும்போது, நாம் நாமாக இருப்போமா என்று சிந்திக்கும்போதுதான் கபாலம் வெடித்துச் சிதறும்போல் இருக்கிறது.

### இறக்குமதி செய்யப்பட்ட மருந்தில் கிருமி

## கண் சத்திர சிகிச்சை செய்யப்பட்ட 10 நோயாளர்களுக்கு பார்வை பாதிப்பு

(நுவரெலியா)

கண் சத்திரசிகிச்சை செய்யப்பட்ட 10 நோயாளர்களுக்கு பார்வை பாதிப்பு ஏற்பட்டுள்ள சம்பவம் நுவரெலியாவில் பதிவாகியுள்ளது.

இவர்கள், நுவரெலியா மாவட்ட பொது வைத்திய சாலையில் சத்திரசிகிச்சை செய்துகொண்டவர்கள் என தெரியவருகின்றது.

கண் சத்திரசிகிச்சை செய்துகொண்ட குறித்த 10 நோயாளர்கள்உரிய பார்வை கிடைக்காமல் தொடர்ந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி முதல் சத்திர சிகிச்சைக்குள்ளான 50 வயதுக்கும் மேற்பட்ட 10 நோயாளர்களே இவ்வாறு தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்தில் கிருமிகள் கலந்துள்ளதால் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பார்வை பலவீனமடைந் துள்ளதாக நுவரெலியா பொது வைத்திய சாலையின் பணிப்பாளர் டாக்டர் மகேந்திர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், சத்திரசிகிச்சைகள் முடிந்து வீடுகளுக்குச் சென்ற நோயாளர்கள் பார்வை முற்றாக இழந்த நிலையில் மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தேவையான சிகிச்சைகளை மேற்கொண்டு படிப்படியாக குணமடைந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ம-7,9)

## திருமலையில் 17 வயது இளைஞன் சடலமாக மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலை, உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலஸ்தோட்டம் பகுதியில் இளைஞர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றிருக்கலாம் எனவும் இச்சம்பவத்தில் 17 வயதான வசந்தராஜா நிலுஜன் எனும் இளைஞனே உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இடத்திற்கு நேற்று வருகைதந்த திருகோணமலை நீதிமன்ற நீதிவான் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்காக உத்தரவிட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9)

### மனித பாவனைக்கு உதவாத

## 6 ஆயிரம் கிலோ பழப்புளி அனுராதபுரத்தில் மீட்பு

(அனுராதபுரம்)

அனுராதபுர மாவட்டத்தில் மனித பாவனைக்கு உதவாத சுமார் 6 ஆயிரம் கிலோக்கிராம் பழப்புளியினை கெக்கிராவ பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கைப்பற்றியுள்ளனர்.

கெக்கிராவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இந்த புளிகள் 20 கிரோக்கிராம் வீதம் பொதி செய்ப்பட்டிருந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கெக்கிராவ வைத்திய அதிகாரிக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நகரிலுள்ள பிரபல வர்த்தகர் ஒருவரின் வீடொன்றில் பதப்படுத்தப்பட்ட நிலையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததாகவும் எனினும் அவை மனித பாவனைக்கு உகந்தது அல்ல என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த புளியின் மாதிரிகளை எடுத்த பின்னர் சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட வர்த்தகரிடம் வாக்கு மூலங்களை பதிவு செய்வதற்கும் பொது சுகாதார பரிசோதகர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன்படி, குறித்த வர்த்தகருக்கு எதிராக உணவுச் சட்டத்தின் கீழ் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு குறித்த புளி கையிருப்புடன்இன்று கெக்கிராவ மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-7,9)

## விரைவில் திருமணம் நடைபெறவிருந்த ஜோடி

### நீரில் மூழ்கி மாயம்

(கொழும்பு)

அத்தனகலு ஓயாவின் கிளையான எல் ஓயாவில் நீராடச் சென்ற போது விரைவில் திருமணம் நடைபெறவிருந்த ஜோடியொன்று நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல்போயுள்ளனர்.

இவர்கள் ஞாயிற்றுக் கிழமை மெதவத்தை பிரதேசத்தில் இருந்து எல் ஓயாவில் குளிப்பதற்குச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,9)

### ஜனாதிபதியின் ஆலோசனையின் பிரகாரம்

## நுவரெலியாவை சுற்றுலாத்தளமாக மாற்ற சிறப்புக் குழு நியமனம்

(நுவரெலியா)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரம் நுவரெலியா நகரை சுற்றுலா தளமாக மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக சிறப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாக நீர் வழங்கல் ம்ற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் பங்கேற்புடன் நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது நுவரெலியா நகரை சிறப்பானதொரு சுற்றுலா தளமாக மாற்றுவதற்கு தேவையான விடயங்கள் தொடர்பில் கருத்துகளும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன. இவை தொடர்பில் ஆராய்ந்து உரிய ஆய்வுகளின் பின்னர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

சுமார் 10 இற்கும் மேற்பட்டவர்களை உள்ளடக்கிய இக்குழுவில் சுற்றுலாத்துறை, பாதுகாப்பு, நிர்வாகம், திட்டமிடல் துறை சார் அதிகாரிகள் இடம் பெறுவார்கள். (ம-7,9)

## மட்டு. சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் இருந்து

### 2 சிறுமிகள் தப்பி ஓட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்திலுள்ள சிறுவர் பராமரிப்பு சீர்திருத்த நிலையம் ஒன்றில் இருந்து 14,13 வயதுடைய இரு சிறுமிகள் நேற்று (திங்கட்கிழமை) தப்பி ஓடியுள்ளனர்.

மாவட்டத்தில் சிறுவர் திருமணம் மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்கள் குறித்த பராமரிப்பு நிலையங்களுக்கு நீதிமன்றத்தினால் அனுப்பப்படுகின்றனர்.

இந்நிலையில் நீதிமன்றினால் குறித்த சிறுவர் பராமரிப்புக்காக அனுப்பப்பட்ட வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த 14 வயது சிறுமியும் ஏறாவூரைச் சேர்ந்த 13 வயது சிறுமியும் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார்.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் சிறுமிகள் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளதாக பராமரிப்பு நிலையத்தினர் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9)

## தலதா மாளிகைக்கு மேல் பறந்த ஆளில்லா விமானம்

### சீன பிரஜைகள் இருவர் கைது

(கண்டி)

கண்டி ஸ்ரீ தலதாமாளிகைக்கு அருகாமையில் உள்ள கண்டி பாதுகாப்பு வலயத்தில் உரிய அனுமதியின்றி ஆளில்லா விமானத்தை பறக்கவிட்ட சீன பிரஜைகள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சீனப் பிரஜைகள் இருவரும் நேற்று காலை 7:00 மணியளவில் ஆளில்லா விமானத்தை பறக்கவிட முயன்றதாக சந்தேகத்தின் பேரில் கண்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த ஆளில்லா விமானத்தை கண்டி தொழில்நுட்ப பிரிவுக்கு அனுப்பி அறிக்கையை பெற்றுக் கொள்ளவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது தொடர்பில் சீனப் பிரஜைகள் இருவரிடமும் வாக்குமூலங்களை பதிவு செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸாரின் சுற்றுலா பொலிஸ் பிரிவினர் விசாரணைகளை மேற்டுள்ளனர். (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு-I

06

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



### தூண்டில்

ஆழமற்ற கடல், நதிகள், குளங்கள், கடனேரிகள் என்பனவற்றில் உள்ள மீன்களைப் பிடிப்பதற்காகப் பெரும்பாலும் கைக்கொள்ளப்படும் ஒரு மலிவான உபகரணமாகத் தூண்டில் கருதப்படுகிறது. குடும்பத்தவரின் நுகர்வுக்காக அல்லது மேலதிக வருமானத்தை ஈட்டிக் கொள்ளும் மார்க்கமாக இது கையாளப்படுகிறது. தற்காலத்தில் பல்வகைப்பட்ட புது வகைத் தூண்டில்கள் பயன்பாட்டில்உள்ளன. மரபு ரீதியிலான தூண்டில், தூண்டில்கோல், தூண்டில் ஊசி, இழை, மிதவை என்பவற்றைக் கொண்டிருக்கும்.

### கைத்தூண்டில்

இது பொதுவழங்கலில் தூண்டில் போடுதல் என அழைக்கப்படும். தூண்டில் கம்பின் பகுதி முனையில் கட்டப்பட்ட மெல்லிய தங்கூசி நூலின் மறுமுனை தூண்டில் கொழுக்கியின் மேல் அந்தத்தில் கட்டப்பட்டிருக்கும். இங்கு சிறிய மீன்கள், மண்புழுக்கள், சிறிய இறால், சிறிய கணவாய் ஆகியன இரையாக குத்தப்பட்டு விடப்படும். குளங்கள், தடாங்கள், நீர்த்தேக்கங்கள், ஆறுகள், ஓடைகள், கடல்கள் ஆகியவற்றில் மீன்களைப் பிடிக்க இது பயன்படுத்தப்படும். சில நேரங்களில் தூண்டில் இடப்பட்டுள்ள இடத்துக்கு அண்மையில் முதலில் இரை இடப்பட்டு அதற்கு அண்மையில் மீன்கள் குவியலடையச் செய்யப்படும்.

பாரம்பரிய கலன்களைப் பயன்படுத்தி இந்த மீன்பிடிமுறை மேற்கொள்ளப்படும். இது பகற் கால மீன்பிடிமுறையாகும். இது தென்பகுதி மீனவரிடையே பிரபல்யமானதாகும்.




### களக்கம்பத் தூண்டில்

மிகப் புராதான முறையான இது தற்சமயம் கரையோரப்பிரதேசங்களில் குடிபெயர்ந்து வரும் சூரை மீன்களைப் பிடிக்கப் பயன்படுத்தப்படும். இதற்கு தூண்டிலில் உயிருள்ள இரை இடப்படுவது அவசியமாகும்.

### சூரைத் தூண்டில்

கரையோரத்திலிருந்து 10 மைல் தூரம் வரையில் உள்ள மீன்களை இதன் மூலம் பிடிக்க முடியும். 12 மீனவர்கள் சூரை மீன் தோணியில் இம்மீன்பிடியை மேற்கொள்வர். 3 1/2 தொன் எடை கொண்ட கலன் இதற்கெனப் பயன்படுத்தப்படும். இதனைப் பயன்படுத்தி பகற் காலத்தில் மீன் பிடிக்கலாம். சூரை மீன் கூட்டங்களைக் கண்டதும் மீன்பிடிக்கலனில் அதற்கு அண்மையில் சென்று உயிர் இரைகள் கடலில் இடப்படும்.

இதனால் சூரை மீன்கள் அதிகளவில் கலவரமடையும். இதன்போது மூங்கிற் தடியின் நுனியில் கட்டப்பட்ட தங்கூசி நூலின் நுனியில் கட்டப்பட்ட முறையற்ற தூண்டில் கொழுக்கிகள் கடலில்வீசப்படும். இதன்போது மினுக்கமான தூண்டில் கொழுக்கிகளையும் உணவாக நம்பி விழுங்




கும்.


மீன் தூண்டிலில் சிக்கியதும் இழுத்து கலனில் இடப்படும். இதனை விரைவாகச் செய்யும் போது அதிக மீன்களை பிடிக்க முடியும். இதுவும் களக்கம் பத்தூண்டில் என அழைக்கப்படுகின்றது.

ஜப்பானில் இம் முறையிலான மீன்பிடி பிரபல்யமாய்ந்ததாகக் காணப்படுகின்றன, இதற்கு நல்ல பயிற்சியும் அனுபவமும் வேண்டும். எமது பிரதேசங்களில் இம்முறையில் மீன்பிடிப்பது குறைவு.

### மீன்பிடிக்கயிறு

இது மிகத் தொன்மையான மீன் பிடித்தல் உபகரணமாகும். இறந்த இரைகளை அல்லது உயிரோடுள்ள இரைகளைப் பயன்படுத்தும் முறையில் மீன்களைப் பிடிக்கலாம். இதன்


நிமித்தம் 50 மீற்றர் வரை நீளமான ஒரு நாண் அல்லது தங்கூசி, ஒரு துண்டுக் கம்பி, ஒரு தூண்டில் கொழுக்கி என்பன அவசியம். இவற்றைக் கொண்டு இவ்வுபகரணம்




ஆக்கப்படும்.

கம்பியற்ற மீன்பிடி கயிறுகளும் உண்டு. எமது நாட்டில் கடற்கரைக்கு அண்மையில் பல பிரதேசங்களில் மீன்பிடிக்க யிறு உபகரணம் பயன்படுத்தப்படுகின்றது.

கடலில் மீன்கள் நடமாடும் இடத்தை அடைந்து, படகினை நங்கூரமிட்டு அல்லது மிதக்கும்படி செய்து, மீன்பிடி கயிறு மூலம் மீன்பிடித்தல் நடைபெறுகிறது. கடலின் அடிப் பகுதியில் உள்ள மீன்களைப் பிடிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் மேற்படி உபகரணத்தின் அந்தத்தில் ஈயத்துக்கு மேற்புறமாக நாணில் துணை நாண் ஒன்று அல்லது இரண்டினைக் கட்டி அவற்றில் உள்ள கொழுக்கிகளில் இரைகளைக் கொழுவி, மீன்களைப்




பிடிப்பார்கள்.

ஓர் உபகரணம் மாத்திரம் கையாளப்படும் பட்சத்தில் கொழுக்கிக்கு மேல் புறத்தில் நாணில் ஓர் ஈயத் துண்டு கட்டப்படும். மேற்படி ஈயத் துண்டு இன்றியும் இவ்வுபகரணத்தைக் கையாண்டு மீன்களைப் பிடிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு.

### தடிகளில் அமர்ந்தவாறு மீன்பிடித்தல்

தடிகளில் அமர்ந்தவாறு மீன் பிடித்தல் என்பது இலங்கையின் பாரம்பரிய மீன்பிடி முறைகளில் ஒன்றாகும். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகுதான் இது உருவானது என்று பதிவுகள் குறிப்பிடுகின்றன. விடியற்காலை, நண்பகல் மற்றும் சாயங்கால வேளைகளில் கிளைத்த கம்புகளில் மீனவர்கள் இருந்து திறமையாக மீன் பிடிக்கும் மீனவர்களின் அழகிய காட்சிகளை கொக்கல, கத்தலுவ மற்றும் அஹங்கம போன்ற தென்கரையோரங்களில் பொதுவாகக் காணலாம். 2004 ஆம் ஆண்டில் சுனாமி ஏற்படும் வரை இந்த மீன்பிடி முறையானது தென் கடற்கரை முழுவதும்பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. அதன்பின் இது சமீபத்திய ஆண்டுகள் வரை இத்தகைய நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இவ்வாறு மீன்பிடிக்கும் மீனவர்களின் நடவடிக்கை எளிதாகவும் வசதியாகவும் தோன்றினாலும் இவ்வாறு மீன்பிடிக்க, மிகவும் திறமை மற்றும்.சமநிலை தேவைப்படுகிறது. இம்முறையில் இணைக்கப்பட்ட குறுக்கு பட்டையுடன் கூடிய செங்குத்து கம்பமானது ஆழமற்ற பகுதிகளிலோ அல்லது ஆற்றங்கரையிலோ கடலின் அடிப் பகுதியில் நடப்பட்டிருக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேக்கரிப்...

கொள்வனவு செய்வதாகவும், அந்த நிறுவனங்கள் தமது விலைகளை அதிகரித்தால் மாத்திரமே பேக்கரி உற்பத்திகளின் விலைகளை அதிகரிக்கவுள்ளதாகவும் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவினால் அனைத்து பேக்கரிகளுக்கும் எவ்வித பிரச்சினையும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள இரண்டு நிறுவனங்களின் கோதுமை மா ஒரு கிலோ 210, 215 ரூபாய் என்ற விலையில் பேக்கரிகளுக்கு வழங்கப்படுவதாகவும் தலைவர் குறிப்பிட்டார். (ம-7,9)

## 85 கிலோ...

85 கிலோகிராம் நிறை கொண்ட கேரள கஞ்சாவே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## வடக்குக் கிழக்கு தமி...

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இல்லத்திற்கு அருகில் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்படவுள்ளது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூர்ந்து இன்று முதல் வடக்குக் கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்கால் கஞ்சியினை வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

இதன் முதல் நிகழ்வே இன்று செவ்வாய்க்கிழமை காலை வல்வெட்டித்துறையில் இடம்பெறவுள்ளது.

மேலும் மருதனார்மடம் சந்தியிலும் காரைநகர் இந்துக் கல்லூரி முன்பாகவும் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாகவும் சாவகச்சேரி பேருந்து நிலையம் முன்பாகவும் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்படவுள்ளது.

நாளை புதன்கிழமை காலை கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்பாகவும் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மாங் குளத்திலும் வியாழக்கிழமை மன்னாரிலும் வவுனியாவிலும் கஞ்சி விநியோகிக்கப்படவுள்ளது.

வெள்ளிக்கிழமை கிழக்கு மாகாணத்தின் திருகோணமலையில் சிவன் கோவில், அன்பொளிபுரம், பத்திரகாளி அம்மன் கோவில், மூதூர் பகுதியிலும் இடம்பெறவுள்ளது.

சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தின் கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் பங்கேற்புடன் வந்தாறுமூலை வளாகம் முன்பாகவும் செங்கலடி, ஆரையம்பதி, மட்டக்களப்பு பிள்ளையார் கோவில் பகுதியிலும் ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் மற்றும் பொத்துவில் பகுதிகளிலும் கஞ்சி விநியோகிக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து மே 15 முதல் யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்படவுள்ளது. (ம-7,9,33)

## மின் கட்டணங்...

ளார்.

2023ஆம் ஆண்டுக்கான இலங்கை மின்சார சபையினால் முன்வைக்கப்பட்டுள்ள மின்சாரத் தேவை தரவுகள் உண்மையான தேவையை விட மிகைப்படுத்தப்பட்ட மதிப்பீடு என்பதை தாங்கள் தற்போது ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் பெப்ரவரி மாதம் இலங்கை மின்சார சபையினால் அமுல்படுத்தப்பட்ட 66 சதவீத மின்சாரக் கட்டணமானது தவறான முடிவாகும் எனவும் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார். (ம-7,9)

## இலங்கையின்...

ஏழு உறுப்பினர்களை கொண்ட G7 நாடுகளின் நிதியமைச்சர்களின் கூட்டம் நடைபெறும் என்று ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது. (ம-7,9)

## வடக்குக் கிழக்கு...

விக்கிரமசிங்கவுடனான பேச்சுவார்த்தையில் பங்கேற்க வேண்டும் என ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு கோரியுள்ளது.

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் அழைப்பாளர், தவத்திரு அகத்தியர் அடிகளார் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்று வடக்குக் கிழக்கு தமிழர் தாயகம் முழுவதும் தொல்லியல் திணைக்கள அடாவடிகளும் கோவில்கள் அழிப்பும், அத்துமீறிய பௌத்த விகாரைகள் அமைப்பும், பௌத்த மயமாக்கலும் அசுர வேகத்தில் அரச இயந்திரத்தால் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் அரசின் பேச்சுக்கான அழைப்பை நாம் மிகக் கவனமாகக் கையாள வேண்டும்.

ஒவ்வொரு முறையும் பேச்சுக்கு அழைத்து பசப்பு வார்த்தைகளை கூறுகின்றார்களே அன்றி உருப்படியான நடைமுறை ரீதியிலான நீண்டகால தீர்வுகள் எதனையும் வழங்குவதாகவோ செயலில் உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதாகவோ இல்லை.

மாறாக படிப்படியாக எமது தனித்துவம், நிலங்கள் என்பன திட்டமிட்டு பொதுமைப்படுத்தப்பட்டு வருவதுடன் இவ்வாறான பேச்சுக்கள் மூலம் அன்று வரையான மாற்றங்கள் அங்கீகரிக்கப்பட்டனவாக மாற்றம் பெறுவதுடன் புதிய பிரச்சினைகளை தோற்றுவிப்பதன் மூலம் அவை மறக்கடிக்கப்படுகின்றன அல்லது மழுங்கடிக்கப்படுகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி ஏற்று ஒரு வருடம் ஆகின்ற நிலையில் 75வது சுதந்திர தினத்திற்கு முன்னதாக தீர்வு பொதி வெளியிடுகின்றேன், சில ஆக்கபூர்வமான விடயங்களை நடைமுறைப்படுத்துகின்றேன் என்றார். நடந்ததோ வேறு. தமிழர் தாயகத்தில் மேலாதிக்க ஆக்கிரமிப்பு மனநிலையுடன் மிக மோசமாக பௌத்த மயமாக்கல் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இதனை கருத்திற் கொண்டு தொல்லியல் திணைக்கள அடாவடி செயற்பாடுகள் மற்றும் பௌத்த மயமாக்கல் முற்றாக நிறுத்தப்படல், தமிழர்களின் ஆதி தமிழர் வழிபாட்டிடங்களுக்கு எந்தவித இடையூறுமின்றி வழிபடும் உரிமையை வேற்றுமத பிரசன்னங்கள் இன்றி அங்கீகரித்தல், வடக்குக் கிழக்கில் காணி விடுவிப்பு மற்றும் முழுமையான மீள்குடியேற்றம், தமிழ் அரசியல் கைதிகளின் நிபந்தனையற்ற விடுதலை போன்ற சமகால விடயங்களின் [illegible] முன் நிபந்தனையாக இம்மாதத்துக்குள் நிறைவேற்றக் கோர வேண்டும்.

நிரந்தர தீர்விற்கான பேச்சுக்கு கால அட்டவணையின் கீழ் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நடுநிலை அவதானத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கடந்த காலத்தில் இந்த விடயங்களில் தலையிட்ட நாடுகளை, வாக்குறுதி தந்த நாடுகளை, ஐ.நா சபையினை எமது தீர்வு மற்றும் புதிய ஆக்கிரமிப்புக்கள் திட்டமிட்ட குடியேற்றங்களை தடுக்க, அரசு மீது பொருளாதார நெருக்கடியான இத்தருணம் மேலும் அழுத்தம் தர கோர வேண்டும்.

முக்கிய தீர்க்கமான காலகட்டத்தில் வலிகள் சுமந்த தியாகங்களினால் சிவந்த தமிழர் வாழ்வில் கண்ணீரின் உச்சந் தொட்ட இந்த மாதத்தில் அனைவரும் ஒன்றுபட்டு இந்த முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் இல்லாவிடின் ஒத்துழையாமை இயக்கத்தை அரசின் சகல திட்டங்களுக்கும் எதிராக முன்னெடுக்க வேண்டும் எனவும் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தையும் கோரி நிற்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9,33)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 08/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1563
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 2 7 1 1 4 0
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.05.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1138
Z 29 70 80 82
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

கொவிசெத Govisetha
திகதி 2023.05.08
சீட்டிழுப்பு இலக்கம் 3350
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
D 34 47 71 72
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 08/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1456
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
Q 10 04 12 24 76

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.05.08
சீட்டிழுப்பு இலக்கம் 417
வெற்றி இலக்கங்கள்
மிதுனம் 07 50 51 58 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/05/08
சீட்டிழுப்பு இலக்கம் 5108
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
L 9 8 7 4 8 4
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2082 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.05.08 தினம் திங்கட்கிழமை
X 08 51 56 76
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,424,240/-
DLB

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.05.08
வெற்றி வாரம்: 4243
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.44,024,583.30
வெற்றி இலக்கங்கள்
21 25 33 34 Y
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,559,771.80
திகதி 2023-05-08
வெற்றி வாரம் 3794
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 15 18 26 50
சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,938,740/-
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 18 39 45 68 76
சீட்டிழுப்பு வாரம் 1258
பச்சை
2023.05.08 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 328,170,536.20
DLB

ஜயோதா Jayoda
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.05.08
வெற்றி வாரம் : 1919
வர்ணம் : செம்மஞ்சள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 42,643,217.20
வெற்றி இலக்கங்கள்
21 51 59 63 A
DLB

அட கோட்டிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 1908
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.05.08
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 83,991,664.20/-
வெற்றி இலக்கங்கள்
12 67 71 74 Q
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம். நெல்லியடி. பருத்தித்துறை. சாவகச்சேரி. கொடிகாமம். கிளிநொச்சி. மானிப்பாய். சுன்னாகம். அச்சுவேலி. சங்கானை வல்வெட்டித்துறை. உடுப்பிட்டி. முல்லைத்தீவு. வவுனியா. மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15455)

076 825 7716 (ஆகாஸ்)



வங்கியில் அடகு வைத்த நகைக்களை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 076 559 3322 (15499)


# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் தனித்தவிலுக்கு இடமில்லை

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்




முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் தனித் தவிலுக்கு இடமில்லை.நினைவேந்தலை குழப்ப யாரும் முற்படக் கூடாது என யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் காட்டமாகத் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் மாணவர் ஒன்றியத்தினரால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.நினைவேந்தல்களை கைப்பற்ற வேண்டும் என பல்வேறு தரப்பு கூறும் நிலையில் தற்போது வடக்கு கிழக்கில் உள்ள பாராளுமன்றத்தில் இருக்கும் 22 ஆசனங்களையும் எந்தவொரு தமிழ்க் கட்சிகளுமே முழுமையாகக் கைப்பற்றாத நிலையே காணப்படுகின்றது.

அந்த வகையில் பாராளுமன்றத்தை முழுமையாகக் கைப்பற்றிவிட்டு நினைவேந்தல்களை கைப்பற்றுவது பற்றி சிந்திக்கலாம் என குறித்த தரப்புகளிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழர் தாயகத்தில் போராளிகள் உட்பட பாதிக்கப்பட்ட தரப்புகள் அமைதியாகக் காணப்படும் நிலையில் எங்கோ இருந்த தரப்புக்கள் தற்போது துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கின்றனர்.

திலீபனின் நினைவேந்தல். அன்னை பூபதியின் நினைவேந்தல் போன்றவற்றில் குழப்பங்கள் இடம் பெற்றிருந்தது.

எனவே ரணில். ராஜபக்ஷவின் நரித் தந்திரத்தை புரியாமல் தமிழ்த் தலைவர்கள் தனி வாத்தியம் இசைக்கக் கூடாது. மாறாக ஒருமித்து நினைவேந்தல்களை மேற்கொள்ளும் தருணத்திலே எங்களுக்கான நீதி கிடைக்கப் பெறும் என தெரிவித்தனர்.(ம-7.33)


**புதிய பிளாஸ்ரிக் போத்தல் விற்பனைக்கு**

எம்மிடம் 1000ml, 750ml, 500ml, 325ml, 200ml, 100ml, 50ml, 28ml புதிய பிளாஸ்ரிக் போத்தல்களை மொத்தமாக வாங்குபவர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

குறிப்பு - நல்லெண்ணெய்,நெல்லிக்கிரஷ், பனங்களி உற்பத்தியாளர்களுக்கு ஏற்றபிளாஸ்ரிக் போத்தல்களும் எம்மிடம் உண்டு. (C-6502)

சிவா நறுமணப்பூங்கா
இல 288 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
(சத்திரத்துச் சந்திக்கு அருகாமையில்)
021-222 2567



**சிறுநீரகம் தேவை**

66 வயதுடைய சிறுநீரக நோயாளி ஒருவரிற்கு O+ (Positive) வகை சிறுநீரகம் தேவைப்படுகின்றது. (C-6507)

076 000 8453
077 673 2552



**VILLAGE HOTEL**

யாழ் - கொழும்பு பஸ் சேவை
மீண்டும் ஆரம்பம்
AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்

077 544 8503



**மணமகள் தேவை**

1981ல் பிறந்த யாழ். இந்து கௌரவ குடும்ப கார்த்திகை நட்சத்திரம் (4ம் பாதம்) உடைய மணமகனுக்கு மணமகள் தேவை
கல்வித்தகைமை - BSC (Jaffna),MSC (London)
London- PR
தொழில்- Business
விவாகரத்துப் பெற்றவர்
எதிர்பார்ப்பு - A/L பூர்த்தி செய்த மணமகள் (15496)

077 110 7624, 078 303 5181 (Viber,Whatsapp)



**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு (C-6506)

வயது -30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com



**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✔ ONLINE APPLICATIONS
✔ VISA APPOINTMENTS
✔ PASSPORT APPLICATION
✔ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-6506)

• STUDENT VISA • TOURIST VISA
• SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன். யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777


# மரண அறிவித்தல்

## திருமதி அண்ணாமலை கமலாதேவி (தேவியம்மா)



| அகம் மகிழ | மனம் நெகிழ |
|---|---|
| 15.08.1945 | 07.05.2023 |

பலாலியைப் பிறப்பிடமாகவும் தூப்புலம் - உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அண்ணாமலை கமலாதேவி (தேவியம்மா) அவர்கள் கடந்த (07.05.2023) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்கராசா - முத்துமாலை தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற அண்ணாமலையின் அன்பு மனைவியும் ரஞ்சினி, மனோகர், சூரி, சசி, மோகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற ரவி, திருமதி பாரதி, கோபு, கவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கபில், விஜேந், கவிந்தன், கவினன், சகானா, டென்ஷன், டெஸ்மன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தஸ்வின், செலெனா, ஜேதன், எமிலியா, ருத்ரா மெக்கல் ஆகியோரின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்ற முத்துத்தம்பி, காலஞ்சென்ற சிவனொளி, ஜெயக்கொடி, வில்வக்கொடி, காலஞ்சென்ற தவம், மகான், ராணி, காலஞ்சென்ற குமுதி, மலர், லதா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பூமணி, காலஞ்சென்ற சிவமலர், இராசராணி, இராசா, வவா, காலஞ்சென்ற செல்லத்துரை, மகாலிங்கம், தனசேகர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (09.05.2023) செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தூப்புலம், உடுப்பிட்டி.
தொடர்பு:- 077 152 0893

தகவல்:- பிள்ளைகளான
ரஞ்சினி, மனோகர் (இலண்டன்), சூரி (சுவிஸ்), சசி (இலண்டன்), மோகன் (C-6505)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.